

# ஞானச்சுடர்

வைகாசி

மலர் 2007



ௐ

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



உ

# குறள்வழி

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

**பொருள்:** இருக்கும் பொருளின் அளவை அறிந்து வாழாதவனின் வாழ்க்கை செழிப்புற்றதுபோலத் தோன்றி இல்லாது அழிந்துபோம்.



## நற்சிந்தனை

### திருவம்மானை - 2

இருவினையிடர் கட்டழித்து எல்லாஞ் சிவன்செயலாய்க்
கருதும் படிவைத்த கருணைநிறை ஆசான்றன்
திருவடியைப் பாடிநாம் சிந்தித்துச் சிந்தித்து
உருகி யுருகி யுணருவோ மம்மானாய் 3

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை குருநாதன்
சேர்த்து திருநயனக் கொள்கையிற் பாவமெல்லாம்
தீர்த்தா னவன்றன் திருவடியை நாம்பாடித்
தோத்திரித் தென்றும் புகழ்பெறுவோ மம்மானாய் 4

ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 113

## 2007 வைகாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஆவணிமாதத்தில் வரும்.... | செல்வி சரவணமுத்து | 1 - 3 |
| மகேசன் சேவை மக்கள்... | | 4 - 5 |
| வாரியார் சுவாமிகள்..... | வல்வையூர் அப்பாண்ணா | 6 - 9 |
| வரண்ட பகுதிக்குகந்த..... | ப. அருந்தவம் | 10 -13 |
| தவமுனிவனின் தமிழ் மந்திரம் | சிவமகாலிங்கம் | 14 - 18 |
| கடவுளுக்கு கண் இல்லையா? | கோப்பாய் சிவம் | 19 - 23 |
| அருணகிரிநாதர் திருப்புகழும்..... | S.S. றஜீந்திரன் | 24 - 26 |
| கல்விநிலையங்களிற் கற்கை...... | முருகவே பரமநாதன் | 27 - 30 |
| அருட்கவி சீ. விநாசித்தம்பி..... | தி. வரதவாணி | 31 - 33 |
| வீடு எங்கே? | ஆ. மகேசு | 34 - 35 |
| முன்னோர் சொன்ன கதைகள் | சி. யோகேஸ்வரி | 36 - 38 |
| ஆனந்த நிலையம் | இரா. செல்வவடிவேல் | 39 - 42 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 43 - 46 |


அன்பளிப்பு:-

மலர் ஒன்று 30/= ரூபா
வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை
தொலைபேசி இலக்கம்:- 021- 2263406
பதிவு இல. Q.D./44/NEWS/2007

அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.

# ஞானச்சுடர்

# சித்திரைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

சித்திரைமாத மலருக்கான வெளியீட்டுரையினை சைவத் தொண்டரும், சமாதான நீதிவானுமாகிய திரு சிவ ஆறுமுகஸ்வாமி அவர்களால் மேற்கொள்ளப் பட்டது.

அவர் தமது ஆரம்ப உரையில் ஸ்ரீமத் மயில்வாகனம்சுவாமி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஆனந்தாச்சிரமப் பணிகள் இன்று சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளாக விரிவடைந்துள்ளதனால்தான் நாம் இன்றும் மயில்வாகன சுவாமி அவர்களை மறக்கமுடியாதவர்களாக இருக்கின்றோம் என்பதை எடுத்துக்கூறிய ஆறுமுகஸ்வாமி அவர்கள் 112ஆவது சித்திரைமாத ஞானச்சுடர் மலருக்கு வெளியீட்டுரை நிகழ்த்துவதற்கு தமக்கு சந்தர்ப்பம் தந்ததையிட்டு நன்றிகூறியதோடு மலரின் சிறப்பையும் எடுத்துக்கூறி இம்மலர் தொடர்ந்தும் வெளிவரவேண்டும். அதற்கு சந்நிதிவேலவன் அருள்புரிய வேண்டும் என்று வேண்டி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**

சுடரின் 112ஆவது மலருக்காகிய மதிப்பீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமம், பேரவையின் வளர்ச்சிக்கு தன்னாலியன்ற பங்களிப்பை செய்பவரும் செஞ்சொற் செல்வனுமாகிய இரா. செல்வவடிவேல் ஆசிரியர் நிகழ்த்தினார்கள்.

ஆசிரியர் தமது உரையில் வடபுலத்தில் இப்படியான ஒரு சமயம் சார்ந்த சஞ்சிகை தொடர்ந்து கடந்த பத்தாண்டுகளாக வெளிவருவது ஒரு சாதனை என்று கூறியதோடு, சமயக்கட்டுரைகளை எழுதும் இளம்சந்ததியினருக்கு அவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் ஒரு களமாகவும் விளங்குவதை நாம் எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்திக் கூறினார். இறுதியாக மலரில் இடம்பெற்ற கட்டுரைகளில் உள்ள கருத்துக்களை சபையில் கூடியிருந்த அடியார்களுக்கு எடுத்துக்கூறியதுடன் இம்மலர் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருப்பது சந்நிதிவேலவனின் அருட்கொடைதான் என்று கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக்கல்வி நிலைய அனுசரனையுடன் இடம்பெற்ற அருணகிரிநாதர் விழா இடம்பெற்றது. விழாவுக்கு வருகைபுரிந்த செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர்களும் சிறப்புரை ஆற்றியதோடு ஆச்சிரமப் பணிகள் மென்மேலும் சிறக்க ஆசி கூறியதோடு அன்றைய நிகழ்வு சிறப்பாக முடிவுற்றது.

உ

# சுடர் தரும் தகவல்

## நாணயம்

மனிதன் நல்லவனாக வாழ்வதற்கு நல்ல குணவியல்புகள் தேவை. அறநெறிகள், மனித விழுமியங்கள், நற்பண்புகள், சமூகநலநோக்கு முதலியனவற்றைக் கைக்கொண்டு வாழ்பவனே நல்லவன் என்ற பெருமைபெறத் தகுதி உடையவன். நல்லொழுக்கங்களில் உண்மை, நேர்மை முதலிய பண்புகளுடன் சொன்னதுபோல நடந்து கொள்பவனை, சொன்னதைச் செய்பவனை நாணயமுள்ளவன் என்று அழைக்கின்றோம்.

தற்கால சூழலில் நாணயம் உடைய மனிதர்களைக் காண்பது அரிதாகிவிட்டது. சொல்வது ஒன்று செய்வதுவேறு என்று வாழ்பவர்களே அநேகர். சொல்வதை அளந்து சொல்ல வேண்டும். தன்னால் செய்வதற்கு இயலுமான ஒன்றையே சொல்ல வேண்டும். விரலுக்கு ஏற்ற வீக்கம் என்னும் கருத்துக்கமைவாக தனது ஆற்றலின் அளவை உணர்ந்து அதற்கேற்றவாறு செயற்படுவது சிறப்பு. தனது ஆற்றலுக்குட்பட்டுச் செய்ய முடியாத ஒன்றை செய்யலாம் என்று கருதி அதனை அடுத்தவருக்குக் கூறிவிட்டுப் பின்னர் இயலாமல் திண்டாடுபவரும் தனது நாணயத்தை இழக்க நேரிடுகிறது. எனவே தன்னால் செய்யமுடியும் என்று கருதுவதையே அடுத்தவருக்குச் சொல்ல வேண்டும்.

நாணயம் என்பது நம்பிக்கையோடும் தொடர்புடையது. ஒருவரை, அவரது சொல்லை நம்பி ஒரு பணியைச் செய்யத் தொடங்கியவருக்கு ஏமாற்றம் அளிக்கும் வகையில் சொன்னவர் நடந்துகொண்டால் அவர் நாணயமற்றவர் என்று மற்றவரால் கணிக்கப்படுவார். நாணயம் தவறி நடப்பவர்கள் அடுத்தவர்களால் மதிக்கப்படுவதில்லை. நம்பிக்கைக்கு உரியவர்களாக இருப்பதில்லை. நாணயம் ஒரு வகையில் நேர்மையும் ஆகும்.

நாணயம் இல்லாதவர்கள் நல்லவர் என்றோ, கனவான் என்றோ கூறிவிடமுடியாது. ஆகவே சமுதாயத்தில் நல்லவர்கள் என்ற பெயரைப் பெறுவதற்கு நாணயம்தேவை. நாணயம் மனிதனுக்கு அவசியம். நாணயமாக நடந்துகொள்வதற்கு இளமையிலிருந்து பழகிக்கொள்ள வேண்டும். நாணயம் ஒருவனை மேன்மையடையச் செய்யும் என்பதனை நாம் மறந்துவிடலாகாது.

---

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.NO. 021- 2263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க. இல. P.7481
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**www. sannithiyan. org**

உ

# கட்டளைக் கலிப்பா

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வா னென்று
போற்றி யேசெல்வச் சந்நிதி செல்லுவோர்
அன்னக் கந்த னவனைப் பணிந்திட
அவனு மென்னடி யாரிவ ரென்றெண்ணி
என்ன நல்வர மெண்ணினா ரவ்வரம்
எய்து மாறு அருளுவன் நீயிரும்
பின்ன மொன்றின்றிச் சந்நிதி சென்றன்னான்
பிறங்கு சேவடி போற்றிநன் குய்வீரே

நிலம்பெ யர்ந்தனம் சந்நிதி யானது
நினைவு நீங்கினம் என்செய்ய மென்றுநீர்
கலங்க லீரந்தக் கந்த னுமைத் தேடி
கடல்கடந் துங்கள் கண்ணீர் துடைத்திட
நலங்கள் நல்கிட நாடி மயிலேறி
நண்ணு வானுன்மை நாடி யவன்தனைப்
பலங்கொள் பக்தி வலையினிற் சிக்கிடக்
பண்ணி நோக்கிப் பணிமின்கா ளேத்தியே

அரிய சந்நிதி ஆச்சிர மத்தினை
ஆளும் சைவக் கலைப்பே ரவையினர்
உரிய காலத்தில் எத்தடை வந்தாலும்
உணர்ந்து தான தருமங்கள் செய்வரால்
முருகன் அன்னதா னத்தின் பணிவுடன்
முறையாய் ஞானச் சுடரின் பணிகளும்
ஒருமை யாயொழுங் காக வெளிவர
உலகம் போற்றிடச் செய்வர் உணரவே.

*முதுபெரும்புலவர்*
*கலாபூஷணம், ஆசிரியர்*
*வை. க. சிற்றம்பலவனார்.*

உ

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

உரிமையாளர்
(புதிய குகானந்தா, தட்டாதெருச்சந்தி யாழ்ப்பாணம்)

திரு கி. இராஜதுரை அதிபர்
(வதிரி பாடசாலை)

உரிமையாளர்
(சுபாஸ் வெதுப்பகம் நெல்லியடி)

திரு சி. கணபதிப்பிள்ளை
(தலைவர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்)

திரு ந. விஜயகுமார் ஆசிரியர்
(ஹாட்லிக் கல்லூரி)

திரு S. கணேஸ்
(இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்)

உரிமையாளர்
(அம்பாள் ஸ்ரோர்ஸ் வல்லைவீதி சங்கானை)

திரு கு. செல்வரெத்தினம்
(நிக்ஷன் பல்பொருள் வாணிபம் அச்சுவேலி)

திரு வை. துரைராசா
(ஒஸ்கா வீதி, உரும்பராய் தெற்கு)

திரு ந. நவரெட்ணம்
(மகேஸ்வரி வாசா ஆனைக்கோட்டை)

திரு S. விமலராசா
(தேவாலய வீதி சங்கானை)

திரு M.B. முருகதாஸ் (கல்யாணி)
(வல்வெட்டித்துறை)

திரு சி. வல்லிபுரம்
(தும்பளை பருத்தித்துறை)

திருமதி ரஜனா ஜெயகேஸ்வரன்
(வீரபத்திர கோவிலடி கதிரிப்பாய்)

உரிமையாளர் [கந்தசாமி அன்சன்ஸ்]
(பலசரக்கு வியாபாரம் சங்கானை)

லயன் சபா இரத்தினசிங்கம் JP
(சபா றேடர்ஸ் அச்சுவேலி)

இரத்தினம்மா பிரபாகரன்
(இரத்தினவாசா மல்வம் உடுவில் சுன்னாகம்)

திரு V. பரமானந்தம்
(கொள்வனவு உத்தியோகத்தர் பரு. ப.நோ.கூ. சங்கம்)

திரு வி. விஸ்வகுமார்
(ஸ்ரீரங்கம் கேணியடி, கொக்குவில் மேற்கு)

திரு இ. தில்லையம்பலம்
(திருவாதெனி இமையாணன்)

திரு P.T. பாலச்சந்திரன்
(அவுஸ்திரேலியா)

திரு கா. அருந்தவராசா
(தொண்டைமானாறு)

செல்வி சாரதாதேவி விஸ்வலிங்கம்
(கெருடாவில் தெற்கு)

திரு இ. கணேசலிங்கம்
(கிராம உத்தியோகத்தர் ஆவரங்கால் மேற்கு)

திரு ஆ. குலேந்திரநாயகம்
(கிராம உத்தியோகத்தர் ஆவரங்கால்)

கனம் தலைவர்
(கலையரசி படிப்பகம் 3-ம் சந்தி, தொண்டைமானாறு)

தலைவர் செயலாளர்
(பொன்னொளி ச.ச. நிலையம், தொண்டைமானாறு)

திரு கோ. யோவலிங்கம்
(கிளை முகாமையாளர் அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம்)

திரு வரதலிங்கம் செல்வமோகன்
(மோகன்கடை ஆவரங்கால்)

திரு சுப்பிரமணியம் கந்தையா
(சிவன் வீதி (பலாலி) ஆவரங்கால்)

திரு ச. கந்தசாமி
(தேவன் ஸ்ரோர்ஸ் ஆவரங்கால்)

திரு சி. ஞானசுந்தரம்
(அச்சுவேலி தெற்கு அச்சுவேலி)

திரு மா. சிவமூர்த்தி
(வீடியோ கலாமினி அச்சுவேலி)

உ

# ஆவணி மாதத்தில் வரும் ஆவணி ஞாயிறு

# ஆவணிச் சதுர்த்தி

செல்வி சரவணமுத்து அவர்கள்

ஆவணி சிங்க இராசிக்குரிய மாதம். சிங்க இராசியில் சூரியன் சஞ்சரிக்கும் காலம் அது. சூரியபகவானது ஆட்சிக்குட்பட்ட இராசி சிங்கராசி. சூரியனது மற்றொரு பெயர் ஞாயிறு. அப்பெயர் தாங்கிய நாள். சிறப்பாக ஆவணி மாதத்தில் வரும் ஞாயிறு சூரிய வழிபாட்டிற்குரிய சிறந்த நாளாகப் போற்றப்படும்.

பூமியின் ஆக்கங்கள் அனைத்திற்கும் மூலமெனப் படக்கூடிய நிலை சூரியனுக்குண்டு. அதனால் சூரியன் தெய்வீக நிலையை அடைந்து வணக்கத்திற்குள்ளாகின்றான். நவகோள்களின் தலைமைத்துவமும் சூரியனுக்குண்டு. அதனால் ஆவணி ஞாயிறு சைவர்களின் விரத தினங்களுள் ஒன்றாகிச் சிறப்புப் பெறுகின்றது. விரதம் அனுட்டிப்போர் அன்று அதிகாலை நித்திரை விட்டெழுந்து செய்ய வேண்டிய கடன்களை நிறைவுசெய்து பசுவின் சாணம் அல்லது மஞ்சள் நீர் கொண்டு வீட்டு முற்றத்தைப் புனிதப்படுத்தி மாக்கோலமிட்டுப் பூரண கும்பம் வைத்துச் சூரியனை வணங்கிக்கொண்டு முற்றத்திலேயே சூரியனுக்கான பொங்கலைச் செய்ய வேண்டும். பொங்கல் நிறைவாகியதும் நிவேதனம் நடைபெறும். பூக்கள் – சிறப்பாகச் செந்நிறப் பூக்கள் மாம்பழம், வாழைப்பழம் முதலிய பழவகைகள் வெற்றிலை, பாக்கு, இளநீர், பொங்கல் முதலியன நிவேதனமாகும்.

தீப, தூப ஆராதனைகள், திருமுறைப் பாராயணம் என்பனவும் தொடரும். பின்னர் திருக்கோவில் சென்று சுவாமிதரிசனஞ் செய்தபின் வீடு வந்து சுற்றஞ்சூழ உணவு கொள்ளலாம். பிதிர் காரணனாகிய சூரியனை வழிபடுவதாற் கட்பார்வை பிரகாசமடையுமென்றும், உடற் பிணிகள் நீங்குமென்றுஞ் சொல்வர்.

வேதகாலத்தின் ஆரம்பத்தில் இயற்கையை வழிபடும் முறைமை இருந்திருக்கின்றது. அந்த முறைமை சிவ வழிபாட்டின் ஆரம்பப்படியாக அமைந்தது. அன்று வழிபாட்டுத் தலங்கள் இருந்தனவென்று சொல்ல முடியவில்லை. சூரியன், சோமன், அக்கினி, வருணன் என்று அன்றைய வழிபாட்டுத் தெய்வங்கள் அமைந்திருந்தன. இவை சிவ வடிவங்களாகவே கொள்ளப்பட்டன.

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமான னாயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாய் ஆகாச மாயட்ட மூர்த்தமாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும் பிறவுருவும் தம்முருவுந் தமேயாகி
நெருநலையாய் இன்றாகி நாளையாகி நிமிர்புன்ச டையடிகள் நின்றவாறே"

என்னும் அப்பர் சுவாமிகள் தேவாரம் அந்த எண்ணத்தை உறுதிசெய்கின்றது.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஞாயிறு, திங்கள், ஆன்மா என்னும் எட்டும் சிவபிரானது அட்ட மூர்த்தங்கள் என்று சொல்லப்படுகின்றன.

"அருக்கன் பாதம் வணங்குவ ரந்தியில்
அருக்கி னாவா னரனுரு வல்லனோ......"

என்னும் அப்பர் சுவாமிகளின் மற்றொரு தேவாரம் அருக்கன் சிவன்தான் என்கின்றது. இதனால் ஞாயிறு சிவ சூரிய மூர்த்தி என்றழைக்கப் பெற்றார். இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னும் வேதங்கள் திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்கள் எல்லாம் சூரியனைப் போற்றுகின்றன. சூரியவழிபாடு சிவவழிபாடுதான் என்று கண்ட மக்கள்

"பெருக்க நுகர்வினைப் பேரொளியாய் எங்கும்
அருக்க னென நிற்கு மருள்"

என்று அருக்கனிடத்துத் திருவருட் டன்மையைக் கண்டனர். இருளை நீக்குதல் ஒளிமயமாக்குதல் என்னுந் தொழில்கள் அருக்கனுக்கும் திருவருளுக்கும் பொதுவாயின அதனாற் சிவசம்பந்தம் தெளிவு பெறுகின்றது. அது காரணமாகவே எமது சிவ வழிபாட்டுவேளைகளிலெல்லாம் சூரிய வழிபாட்டிற்குச் சிறப்பான இடங்கொடுக்கின்றோம். எமது வீடுகளில் நடைபெறும் கிரியைகளில் ஆதித்தன் வழிபாட்டிற்குரிய முக்கியத்துவம் நாம் அறிந்ததுதான். ஆலயங்களில் கூட அதிகாலைப் பூசைவேளையில் சூரிய வழிபாடு நடைபெறுகின்றது. சில ஆலயங்களில் சூரியனுக்கென்றே தனித்த ஓர் சந்நிதியும் உண்டு. அவ்வண்ண மாய சூர்யபகவானை சிவமூர்த்தமாகக் கண்டு வழிபட்டுப் பெரும் பயனடைவோம்.

**ஆவணிச்சதுர்த்தி**

எந்தவொரு கருமத்தைத் தொடங்கும் போதும் சைவர்களாகிய நாம் விநாயகரை வழிபடுவதை எமது வழக்கமாக்கிக் கொண்டுள்ளோம். விநாயகனை வழிபட்டுத் தொடங்கும் கருமங்கள் எல்லாம் எந்தவித முட்டுமின்றித் தொடருமென்பது சைவர்கள் நம்பிக்கை. விக்கினங்களை நீக்குபவன் என்பதால் இடையூறுகள் இடையே புகுந்து குறுக்கீடு செய்யாவகை காத்தருள வேண்டுமென வேண்டிக்கொள்வது போன்று ஆரம்பத்திலேயே விநாயகனுக்கு வணக்கம் செலுத்துகின்றோம். இந்த எண்ணப் பிரதிபலிப்பாகவே அவரை விக்னேஸ்வரன் என்றுங் குறிப்பிடுகின்றோம்.

வைரவர் வழிபாடுபோன்று விநாயக வழிபாடும் எளிதானது அதைவிட எளிதானது என்றுஞ் சொல்லலாம். ஆல், அரசு முதலான மரத்தடிகளிலும் ஆற்றங்கரை, குளக்கரை தெருக்களின் சந்திப்பு முதலான இடங்களிலும் விநாயகரை வழிபடுகின்றோம். பசுவின் சாணி, மஞ்சள்மா, சந்தனம் முதலியவை கொண்டு பிள்ளையார் பிடிக்கலாம். அதிலே அறுகைச் சார்த்தி வழிபட முடியும். விநாயகரை வழிபடும்போது மூன்றுமுறை சிரசிலே குட்டி வலக்கையால் இடக்காதையும் இடது கரத்தால் வலக்காதையும் பிடித்துக் கொண்டு மூன்றுமுறை தோப்புக்கரணம் போட்டு வணங்குவது உவப்பான வழிபாடாகும். உடல்நலமில்லாத பெண்கள் தோப்புக் கரணம் போட்டு வழிபடுதலைத் தவிர்த்துக் கொள்ளுதல் விரும்பக்கூடியது.

விநாயகரை நினைத்து அநுட்டிக்கப்படக்கூடிய சிறப்பான விரதங்கள் மூன்று. அவற்றுள் விநாயகர் சதுர்த்தி சிறப்பானதெனச் சிந்திக்கப்படும். மாதந்

தோறும் சதுர்த்தித் திதி இருமுறை வரும். அவற்றில் தேய்பிறை காலத்திலேயே சதுர்த்தி சங்கடஹர சதுர்த்தி எனப் பெயர் பெறும். துன்பந்தரும் முறைமை களை நீக்கிக்கொள்ள வேண்டி இந்தச் சதுர்த்தி விரதம் அநுட்டிக்கப்படும். ஆவணிமாத வளர்பிறைக் காலத்திலாகிய சதுர்த்தியே விநாயக சதுர்த்தி எனப்படும். விநாயகர் தோன்றிய தினம் அது என்பது ஒரு கருத்து நிலவுவதே அதற்கான காரணமாகலாம். விநாயக சதுர்த்தி என்று தொடர்ந்து விரதம் அநுட்டிக்க விரும்பு வோர் ஆவணி மாதத்து வளர்பிறைக் காலத்தில் வரும் சதுர்த்தியிலேயே ஆரம்பித்து மாதந்தோறும் வரும் சதுர்த்தி திதிகளிலும் தொடரவேண்டும். இப்படி இருபத்தொரு ஆண்டுகள் விரதமிருக் கலாம். இருபத்தொரு ஆண்டுகள் விரத மிருக்க முடியாதவர்கள் ஏழு ஆண்டுகள் தொடர்ந்து அநுட்டித்து நிறைவு செய்ய லாம். அதுவும் செய்ய முடியவில்லை யெனில் இருபத்தொரு சதுர்த்தித் தினங் களுக்கு குறையாது விரதத்தைக் கைக் கொண்டு அடுத்துவரும் விநாயக சதுர்த்தி யிலே நிறைவு செய்யலாம்.

விரதமிருப்போர் அதிகாலை நித் திரை விட்டெழுந்து செய்யவேண்டிய காலைக்கடன்களை முடிக்கும் வகை நித்திய கருமவிதிகளை நிறைவுசெய்து, வீட்டில் ஓரிடத்தைப் புனிதப்படுத்தி மாலை, தோரணம் என்பவற்றால் அலங் கரித்து விநாயகரை எழுந்தருளப்பண்ணி வழிபடலாம். விநாயகர் திருவுருவை வசதிக்கேற்ப சாணம், மஞ்சள்மா கொண் டும் அமைக்கலாம். தாமிரம், வெள்ளி என்பவற்றால் ஆக்கப்பட்ட திருவுருவையும் பயன்படுத்தலாம். தோத்திர பாராயணம், நிவேதனம், தீபாராதனை என்பன செய்து வழிபடலாம். இருபத்தொரு பத்திரம், இருபத்தொரு பூ, இருபத்தொரு அறுகம் புல் என்பவை கொண்டு தனித்தனி அர்ச்சித்தல் சிறப்பானதென்பர். பின்னர் ஆலயமொன்றுக்குச் சென்று சுவாமி தரி சனஞ்செய்தபின் மதிய உணவு கொள்ள லாம். இரவு உணவை தவிர்த்தல் நல் லது. விடமுடியாதவர்கள் பால் பழம் அல்லது பலகாரவகை உண்ணலாம். நண்பகல் வேளை சதுர்த்தி நிற்குந் தினமே விரதத்திற்குரிய தினமாகக் கொள்ளப்படவேண்டும்.

ஒரு சந்தர்ப்பத்தில் விநாயகப் பெருமான் தேவர்கள் முன்னிலையில் விகடக்கூத்தாடினார். அந்தவேளை அவ ருடைய உடல் தொந்தி என்பவற்றின் அசைவைப் பார்த்துச் சந்திரன் சிரித்து விட்டான். அதனை அவதானித்த விநா யகர் சந்திரனைப் பார்த்து பெரியவர்கள் முன்னிலையில் நீ அடக்கமின்றிச் சிரித்து விட்டாய். ஆனபடியால் நீ சண்டாள னாவாய் என்று சபித்துவிட்டார். விநாயகர் சாபத்தினால் சந்திரன் ஒளி மழுங்கி மறையவிருந்த சந்தர்ப்பத்தில் இந்திரன் உபதேசப்படி இருபத்தொரு வருடங்கள் சதுர்த்தி விரதத்தை அநுட்டித்தான். மகிழ்ந்த விநாயகர் விமோசனம் அளித்தார். ஆவணி பூர்வச் சதுர்த்தி யன்று மட்டும் உன்னைப் பார்ப்பவர்கள் சண்டாளர்கள் ஆவர். ஏனைய காலங் களிற் புனிதம் போற்றப்படும் என்று சந்திரனுக்கு வாழ்வளித்ததாக ஒரு செய்தியுண்டு. விரத அனுட்டானங்கள் மனத்தைத் தூய்மை செய்வன. மக்க ளாகிய நாம் மாதத்தில் வரும் விரதங் களையாவது அநுட்டித்து மனத்தையும் உடலையும் தூய்மைப்படுத்தி வாழ் வோமாக.

பணமில்லாத மனிதன் அம்பில்லாத வில்.

உ

# மகேசன்சேவை மக்கள் சேவையாகிறது

மனிதர்களுக்குச் செய்யும் சேவை மகேசனுக்குச் செய்யும் சேவை எனப் பலர் கூறுவதுண்டு. ஆலயம் அமைத்தல், பூசைகள் செய்தல் ஆகியவற்றால் அதிக பணமும், அதிக நேரமும் விரையமாகிறது என்று நாத்திகம் பேசும் நவீன இளைஞர்கள் வாதிடுவதும் உண்டு. இவற்றுக்குச் செலவுசெய்யும் பணத்தைக்கொண்டு பாடசாலைகள் அமைத்துக் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்துவதும் வைத்தியசாலைகள் அமைத்து மக்களது நோய் தீர்ப்பதும் சிறந்தது என்பர். எனவே ஆலயங்கள் அமைத்தல், பூசை வழிபாடுகள் செய்வது தேவைதானா? என்ற வினா எழுகிறது.

எமது சமயம் சைவம். சைவம் என்றால் சிவம், சிவம் என்றால் சைவம். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள் சைவர்கள். "சிவன் அல்லாது தெய்வம் இல்லை" "சிவனோடு ஒக்கும் தெய்வம் வேறு இல்லை" "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே மாதொரு பாகனார் வந்து அருள் செய்வார்" இவ்வாறு பல அருளாளர்கள் சிவன்தான் மேலான தெய்வம் என்கின்றனர். எமது சமயம் மறுபிறப்பு உண்டு என்றும், பல பிறவிகள் எடுத்து ஈற்றில் சீவன் சிவன் ஆகின்றதென்றும், அதுவே முத்திநிலை என்றும் போதிக்கின்றது. இதனையே மணிவாசகரும் "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" என்கிறார்.

மனிதன் பொருள்தேடி, அறிவு தேடி, உடல்நலம்பேணி, உண்டு உயிர் வாழ்ந்தால் மட்டும் போதுமா? மிருகங்களும் எம்மைப்போல் உழைத்து, உண்டு, உறங்கி உயிர்வாழ்கின்றன. மக்களையும் மாக்களையும் வேறுபடுத்துவது எது? மனம் படைத்தவன் மனிதன். அவன் ஓர் சிந்தனைப் பிராணி. இந்த மனம் என்ற கருவி இருப்பதனால் மனிதப்பிறவி அரிது என்கின்றனர். மனிதன் பணம், கல்வி உடல்நலம் ஆகியன இருந்தும் ஒழுக்கம், பக்தி, தியாகம், கட்டுப்பாடு இல்லாது மிருகங்கள்போல் வாழ்ந்தாற் போதுமா? இந்த உலகியல் வாழ்வைவிட மனிதனுக்கு நிரந்தரமான நன்மை பயக்கக் கூடிய மறு உலக வாழ்வு ஒன்று உண்டு என்பதை உணரவேண்டும். வள்ளுவப் பெருந்தகையும் பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலக வாழ்வு இல்லாதது போல் அருள் இல்லார்க்கு அவ்வுலக வாழ்வு அதாவது முத்தி மோட்சம் இல்லை என்கிறார்.

நோயாளியின் உடலில் நோய் இருப்பதுபோல் எமது மனத்திலும் பல மாசுகள்- அழுக்குகள் நிரம்பி இருக்கின்றன. காமம், குரோதம், மோகம், மதம், மாச்சரியம் ஆகிய ஐந்து கெட்ட குணங்கள் – நோய்கள் எமது மனத்தைப் பீடித்துள்ளன. வைத்தியசாலையில் நோயாளியின் நோயைத் தீர்ப்பது போல் எமது மன அழுக்குக்களையும் இல்லாது செய்ய வேண்டும். எத்தனையோ நூல்களைப் படித்த அறிவாளிகள்கூட வாலறிவு (இறைபற்றிய அறிவு) இல்லாது அயோக்கியர்களாகவும், துர்நடத்தை உள்ளவர்களாகவும் ஒழுக்கம் இல்லாதவர்களாகவும் இருப்பதை நாம் காண்கின்றோம். எனவே, மனிதன் மன நலம்

அச்சம் இருக்கும் வரையில் நீ அறிவாளியாக மாட்டாய்.

உடையவனாக, நல்லவனாக இருக்க வேண்டும் என்பதுதான் முக்கிய இலட்சிய மாகக் குறிக்கோளாக இருக்கவேண்டும். எனவே மனிதனை நல்லவன் ஆக்கு வதற்கு ஆலயங்களும் அறச்சாலைகளும் வழிவகுக்க வேண்டும். ஆரோக்கியம், கல்வி, செல்வம் என்பவற்றைவிட மேலான பரம்பொருளுடன் சேருவதற்கு தியானம், பூஜை வழிபாடு ஆகியன மூலம் நமது மனதைப் பகவானிடம் செலுத்தி உய்தி பெற்று, மற்றவர்களும் உய்திபெற வழி வகுக்க வேண்டும்.

பகுத்தறிவாளர்கள் சிலர் மனிதன் நல்லவன் ஆவதற்கு பக்திவழிபாடு தேவை இல்லை, ஒழுக்க நலன்களையும், சமூக நலன்களையும் பேணினால் போது மென வாதிடுவர். ஆனால் நடைமுறை யில் பலவித சுயநல ஆசைகளால் கவரப் பட்டு அல்லல் உறும் ஆன்மாக்களைப் பரிசுத்தப்படுத்த பக்தி என்ற சாதனம் மிகவும் அவசியம். மனிதனைத் தெய்வ மாக மதித்து அவனுக்குச் சேவை செய் வது சிறப்பாகக் கருதினாலும், மனிதன் தன் தெய்வீகத்தைக் கொஞ்சமாவது தெரிந்துகொள்ள - உணர்ந்துகொள்ள ஆலயவழிபாடு மிகவும் அவசியமாகும். இதனை அறிந்த பல சான்றோர்கள் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" "கோபுரதரிசனம் கோடி புண்ணியம்" "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று ஆலயத்தின் அவ சியத்தை வலியுறுத்துகின்றனர். மேலும் திருநாவுக்கரசு சுவாமிகள் கோவில் இல் லாத ஊர், திருநீறு அணியாத மக்கள் உள்ள ஊர், பக்தியால் பாடாவூர், வெண்சங்கு ஊதாவூர், பல தளிகள் இல்லா ஊர், விதானமும் வெண் கொடி யும் இல்லா ஊர், மலர் பறித்து இட்டு உண்ணாத ஊர் எல்லாம் மிருகங்கள் வாழும் காட்டுக்கு ஒப்பாகும் என்கிறார்.

தற்போதைய நவீன விஞ்ஞான வளர்ச்சி காரணமாகப் பல ஆடம்பர மான, நவீன இயந்திர சாதனங்களும், கருவிகளும் உற்பத்தி செய்யப்படுவதால் அதனை வாங்கி சொகுசாக, ஆடம்பர மாக வாழ ஆசைப்பட்டு ஆலாய் பறந்து, ஓய்வின்றி உழைத்து மனநிம்மதி இன்றி உழல்வதை நம் கண்ணூடாக காண்கின் றோம். இதனால் சமூகத்தில் லஞ்சம், ஊழல், கலப்படம், கள்ளவியாபாரம், கடத்தல், களவு போன்ற பல சமூகவிரோ தச் செயல்கள் மலிந்துள்ளன. எனவே, பணவசதி, ஆடம்பரவாழ்வு, உயர்கல்வி, உயர்பதவிகள், அடுக்குமாளிகை, மட்டும் இருந்தால் போதாது. மக்கள் ஒழுக்கம் உள்ளவர்களாகவும், ஆசார சீலர்களாக வும், பக்தி உள்ளவர்களாகவும் மிளிரச் செய்ய வேண்டும். எனவே, சிறந்த ஒரு சமூகத்தை உருவாக்க ஆலயங்களும், அறச்சாலைகளும் வழிசெய்ய வேண்டும். கூட்டுவழிபாடு, சமயச்சொற்பொழிவுகள், சமயக் கல்வி, அற்றார் அழிபசி தீர்த்தல் போன்ற ஆன்மீக வளர்ச்சிப்பணி செய்ய ஆலயங்கள் உதவிசெய்வதன்மூலம், இறைவன் சர்வ வல்லமை உள்ளவனாக இருந்து நமது செய்பாடுகளுக்கான பலனைத் தருகிறான் என்ற பயபக்தி உணர்வு ஏற்பட்டு மக்களிடத்துத் தர்ம மார்க்கத்தை நிலை நிறுத்துவதற்குப் பெரிதும் உதவிபுரிகின்றது. எனவே இறைபணி மூலம் மக்கள்பணி ஏற்படுவது மிகச் சிறந்ததாகும்.

துன்ப உலகில் மனத்திற்குச் சற்று ஆறுதல் அளிப்பது உறக்கமே.

உ

# வாரியார் சுவாமிகள் அருளிய ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகள் புராணம்

வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

சில நாட்கள் நகர்ந்தன. அருண கிரியாரின் தவப்பயன் வெளிப்பட்டது. ஆறிரு தடந்தோள் அண்ணல் அழகிய மயில்மீது தெய்வயானை, வள்ளி சமேதராய்க் காட்சி கொடுத்தார். வானவர் வாழ்த்தி நிற்க, தேவர்கள் மலர்தூவி நின்றனர். அக்காட்சியைக் கண்ட அருண கிரி எல்லையில்லா மகிழ்வுடன் துன்பம் நீங்கிக் கண்கள் கண்ணீர் மழை பொழிய ஆடிப்பாடி ஆனந்தம் கொண்டார். பெருமான் தன் திருக்கரத்தை அருணகிரிநாதரின் தலைமீது வைத்து. "உனது புகழ் நின்று நெடிது வாழ்க" எனக்கூறி அந்நாளில் நஞ்சை அருந்திய சிவனுக்கும், அலைகடலை அருந்திய பொதிய மலையில் வீற்றிருக்கும் அகத்தியருக்கும் ஓதிய பிரணவப் பொருளை அழுக்ககன்ற அருணகிரியாரின் காதுகளில் ஓதினார். "மகனே! மண்ணும் விண்ணும் தழைக்கக் குறையா வளந்தரும் கொற்றத் தமிழின் கோலம் உயர நமது புகழைத் தேனருவித் தமிழ் மொழியில் முறைசேரப் பாடுவாயாக" என்றார் திருமுருகன். "தமிழை ஆராயாது வீணே நாளைக்கழித்தேனே. நின் புகழை வகுத்துப் பாடும் வல்லமை எனக்கு உண்டோ" என மயங்கித் தயங்கிய அருணகிரியாரின் திருமுடியில் தன் சதங்கை திகழும் காலால் திருவடி தீட்சை தந்து, கரத்தால் வேல்கொண்டு அவர் நாவில் வேதத்தினை எழுதி, தன் திருவாயால் 'அடி' ஒன்றினை அருளிச் செய்தார்.

"முத்தைத்திரு பத்தித்திருநகை
அத்திக்கிறை சத்திச்சரவண
முத்திக்கொரு வித்துக்குருபரன்...."

என்ற முறையில் தொடங்கும் அடியைக்கொடுத்து "திருப்புகழைப்பாடு" என்றான் திருக்குமரன். தகப்பன்சாமியாகிய தமிழ்க்கடவுளான முருகன் தன் மதுரக்கனிவாயால் அடி எடுத்துக் கொடுத்த திருப்புகழை உள்ளத்து உணர்வுகொண்டு பாடி முடித்தபின், மீண்டும் ஒரு பாடலைப்பாடும் திறனற்று முருகனை நினைந்து சிவயோகப் பெருவாழ்வில் ஈடுபட்டார்.

சில நாட்கள் செல்லவும் கந்தன் கருணையினாலே அருணகிரியார் கேட்கும் வண்ணம், "நமது வாழ்விடமான வயலூருக்கு வா" என்று அசரீரி ஒலி எழுந்தது. அதிசயமுற்று விழித்தெழுந்து, தமக்கை ஆதியிடம் சென்று விடைபெற்று வயலூர் சென்று, "தூயவனே! என் தாயவனே!! எனக்கு உன் கருணையைக் காட்டு" என மெய்சிலிர்க்கக் கண்ணீர் பெருகக் கைகளைக் குவித்து ஆராதித்து நின்றார். மகிழ்ந்த முருகன் மாமயிலின்மீது திருமாமுகம் ஒன்றுடனும், அழகுமிகு வேலுடனும், மாலை நிறைந்த மார்புடனும், மலர்போன்ற திருவடியுடனும் தோன்றவே அருணகிரியார் ஆனந்தப்பரவசமாகி அடிபணிந்து வணங்கினார். முருகப்

**இறைவன் மனித இனத்தில் நம்பிக்கை இழக்கவில்லை.**

பெருமான் தன் திருவடிகளை முடிமிசை வைத்து வேதங்கள் போற்றும் பிரணவ மந்திரத்தில் விளங்கும் சடாட்சரத்தை மனமும் செவியும் குளிரும் வண்ணம் தன் திருவாயால் உபதேசித்ததுடன் இன்னமும் பின்வருமாறு கூறினான்.

"அன்பு மகனே! நமது ஓம் எனும் வடிவம் கொண்ட மயிலை, கடம்ப மாலையை, திசையெங்கும் இசைபரப்பும் சேவலை, மலையைப் பிளந்த மாண்புறு வேலை, அடியவர்க்கு அருளும் தாளை இவைகளுடன் வயலூரையும் வைத்துத் திருப்புகழைப்பாடு" என்று அருளினான். முருகன் மறைந்ததும் அருணகிரியார் செந்தமிழால் திருப்புகழைப் பாடத் தொடங்கி "ஐந்து கரத்து எந்தையாம் விநாயகனைச் சிந்தித்து "நல்லருள் புரிக நாயகனே" என வேண்டி **"பக்கரை விசித்ர"** என்னும் பாடலைப் பாடினார். ஐங்கரனின் அருள்வரப்பெற்ற அருணகிரி யார் ஓசை நயத்துடன் **"கைத்தல நிறை கனி"** என்று தொடங்கும் திருப்புகழைப் பாடினார். உலகம் உய்யத் தமிழ் தழைக்க அறுபடைவீடான திருப்பரங்குன் றம் தொடங்கிப் பழமுதிர்சோலை ஈறாக ஆறு ஆதாரத்தை ஆறுபடை வீடாகத் தொகுத்துத் திருப்புகழை வகுத்து நின்றார்.

ஸ்தல யாத்திரை மேற்கொண்டு சிதம்பரம், திருவாரூர் இன்னும் பல ஸ்தலங்களுக்கும் சென்று சந்தத் தமிழில் இன்பத் திருப்புகழ்பாடி மீண்டு வந்து வயலூரில் தங்கியிருந்தார். ஒருநாள் முருகன் கனவிலே தோன்றி "நம் வாழ்விடமான விராலிமலைக்கு வா" என்று பணிக்க, விராலிமலை சேர்ந்த அருணகிரியாருக்கு அட்டமாசித்திகளும் கிடைக்கப்பெற்றன. அங்கிருந்து பழநி மலை சென்ற அவருக்கு, கலிசைநகர் ஆளும் "கலிசைச்சேவகர்" என்னும் முருக பக்தரின் நட்புக்கிடைத்தது. மூன்று நாள் நிருவிகற்ப சமாதியிலிருந்து கண்விழித்த அருணகிரியார், தமதருகே தம் அருமை நண்பர் கலிசைச் சேவ கரைக் காணாது திகைத்து நின்றார். கலிசைச் சேவகனார் கடும் காய்ச்சல் நோயினால் அவதிப்படுகிறார் என்பதை அறிந்து **"தலைவலி மருந்தீடு"** என்னும் திருப்புகழைப் பாடித் திருநீறு கொடுத் தனுப்பிச் சுரநோய் நீங்கும்படி செய்தார்.

சிலநாள் பழநியில் தங்கியிருந்த பின்னர், மதுரைநகர் சேர்ந்து திருப்பரங் குன்றம் சென்று பெருமானை வணங்கித், தூய தமிழ்ப் பாமாலை பாடிப் பின்னர் பிரான்மலை (கொடுங்குன்றம்) சென்ற போது அறுமுகனாரின் அழகிய நடன தரிசனம் கிடைக்கப்பெற்றது.

அங்கிருந்து இராமேஸ்வரம் சென்று திருப்புகழ்பாடி, இன்னும் பல தலங்களையும் தரிசித்து, ஈழநாட்டிலுள்ள தலங்களைப் பாடியபின் திருச்செந் தூரைச்சேர்ந்தார். அருணகிரிநாதர் சென்ற வேளை செந்திலில் பிரம்மோற்சவம் நிகழ்ந்து கொண்டிருந்தது. ஜெயந்திநாதர் திருக்கோயிலைவிட்டு மணற்றிட்டுக்கு எழுந்தருளியிருந்தார். குமரநாதனின் திருக்கோலம் கண்ட அருணகிரிநாதர் "இந்த அழகிய தோற்றத்திலேயே ஆடிக் காட்ட வேண்டும்" என வேண்டித் **"தண்டையணி வெண்டை"** என்னும் திருப்புகழ் பாடவே, செந்தில் முருகன் பின்புறமாக நடனம் புரிந்து அனைவரை யும் பரவசப்படுத்தினார். (அன்றிலிருந்து திருச்செந்தூர் மகோற்சவ விழாவின்

ஏழாவது நாள் நர்த்தன தரிசனமும், பின்னலங்காரமும் அறுமுகனின் அருட் கருணையினாலே விளங்கி வரலாயின) அங்கிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் என்கிற பழைமையான ஊருக்கு வந்தபோது ஒரு நிகழ்வு நடந்தது.

அருணகிரிநாதர் எதிரில் அறுபட்ட காதுடன் புலவர் பலர்வரக் கண்டு "அதற் கான காரணம் என்ன?" என்று வினா வினார். திருமாலின் அடியவனான "வில்லிபுத்தூரர்" என்ற பெயர் கொண்ட கல்விச் செருக்குடைப் புலவர் ஒருவர், வல்வழக்கிட்டு வாதில் தோற்கும் புலவர் களின் காதை அரிந்து அனுப்புவதாகவும் எங்களுக்குக் கிடைக்கும் இந்தத் தண் டனையிலிருந்து எம்மைக் காத்தருளு மாறும் வேண்டிநின்றனர். புலவர்களது துன்பம் கண்டு வருந்திய அருணகிரிநாதர் கந்தவேளைச் சிந்தையிற்கொண்டு வில்லி புத்தூரரின் முன்பாகச் சொல்லாடச் சென் றார். வில்லிபுத்தூரர் விதித்த நிபந் தனைகளை அருணகிரிநாதர் ஏற்றுக் கொண்டதுடன், அதே நிபந்தனைகளுக்கு அவரையும் கட்டுப்படுத்தினார். சொல் லாடல் தொடங்கியது. வில்லிபுத்தூரர் பாடிய அந்தாதி வகையிலான நூறு பாடல்களுக்கும் அருணகிரியார் உடனுக் குடன் பொருள்கூறி நின்றார். பின்னர் அருணை முனிவர் பாடிய கந்தரந்தாதி யில் ஐம்பத்துமூன்று பாடல்களுக்கும் வில்லிபுத்தூரர் பொருள் கூறினார். ஐம் பத்து நாலாவது பாடலான "திதத்தத்த" என்னும் பாடலைப் பாடவே பொருள் உரைக்க முடியாத வில்லிபுத்தூரர் தோல்வியை ஒப்புக் கொண்டார். இரக்கமே உருவான அருணைமுனிவர் வில்லிபுத்தூரரை மன்னித்து அருளினார். அருணகிரிநாதர் ஐம்பத்துநாலாவது பாடலுக்குப் பின்னைய பாடல்களையும் பாடிப் பொருள் கூறினார். வில்லிபுத்தூர ரும் மற்றும் சுற்றியிருந்த ஏனைய புலவர் களும் அருணை முனிவரின் திறன்கண்டு வியந்து நின்றனர். அவரும் அனைவரிட மும் விடைபெற்றுத் தனது தல யாத் திரையைத் தொடர்ந்தார்.

திருவேரகம் எனப்படும் சுவாமி மலை சென்றடைந்த அருணைமுனிவர் பிரணவ வடிவினனான முருகனைத் தொழுது, விபூதி உருத்திராக்கம் அணிந்த கோலத்துடன் யோகத்தில் அமர்ந்திட்டார். அங்கு அவரைக்கண்டு வேண்டிநின்ற தமக்கை ஆதிக்காக, "தெருவினில் நடவா மடவார்" என்ற பாடலைப் பாடித், தன் தமக்கையை ஆண்டருள்க" என வேண்டி நின்றார். அருணை முனிவரின் வேண்டுதலை ஏற்ற அறுமுகன் ஆதியைத் தன் திருவடிகளிற் சேர்த்து அருளினான்.

மகிழ்ந்த அருணகிரியார் அரு ணைக்கு மீண்டு, தன்னை ஆண்டருளிய வனின் அடியினை முடியில் வைத்துப், பாமாலை பல புனைந்து சிவயோகத்தில் அமர்ந்தார். அருணையம்பதி அரசன் மனுமுறை தவறாத மாண்பினன், எல்லா நற்குணங்களும் ஒருங்கே அமைந்த "பிரபுடதேவன்" என்னும் வேந்தன் நிறைந்த இறை அன்பு கொண்டவன். அதேவேளை, தீய மனத்தினனும் தெளிவற்ற குணத்தினனுமான சமண சமயத்தைச் சேர்ந்த "சம்பந்தாண்டான்" என்பான் மந்திர தந்திரங்கள் நிறையக் கற்றதனால் செருக்குற்று மன்னனையும் தன் வசமாக்கிக்கொண்டான். ஒருநாள் அரசன் முன்னே நடந்து செல்லப் பல்

பொறுமையே நீடித்த பிரார்த்தனையாகின்றது.

லக்கில் மிடுக்காக அமர்ந்தபடி மேளதாள வாத்தியம் முழங்கக் கோயிலினுள் நுழைந்தான் சம்பந்தாண்டான். கோயிலினுள் பல்லக்கில் பவனிவரும் அவன் யாரென்பதை அங்கிருந்தவர்கள் மூலம் தெரிந்துகொண்ட அருணை முனிவர் மனம் நொந்து வருந்திப் "படர் புவியின் மீது" என்னும் திருப்புகழ் பாடித் துதிக்க ஆண்டானின் பல்லக்கு முறிந்து பூமியில் வீழ்ந்து வெட்கமுற்றுத் தன் இருப்பிடம் நோக்கி ஓடினான்.

சமணனுக்கு நேர்ந்ததைக்கண்ட மக்கள் ஒரு பக்கம் மகிழ்ந்தாலும், இனி இந்தத் தீயவனால் என்ன நேருமோ என அச்சம் கொண்டனர். மக்கள் நினைத்த படியே, பொறாமையினால் வெந்து வெதும்பிய சம்பந்தாண்டான், அன்றிரவே தன் உபாசனா தெய்வமான காளியை வரவழைத்தான். "வல்லாளன் கோபுரத் தடியில் வாழ்ந்துவரும் அருணகிரிநாதரைக் கொன்றுவா" என ஏவினான். சின முற்றுச் சிலிர்த்துவந்த காளியும் கோபுர வாசலை அண்மித்தாள். ஞானமே உருவான முருகன் சின்னஞ்சிறு குழந்தையாகிச் சிங்கார சிரிப்புடன் தளிர் நடை பயின்று காளியின் எதிரே வந்தான். சேயைக்கண்ட தாய் சினம் சிதறி, அழகு மகவை அள்ளியெடுத்து உள்ளம் குளிர உச்சிமோந்து மார்போடணைத்துக் கொஞ்சிக் கூத்தாடிவிட்டுத் தன் இருப்பிடம் திரும்பினாள்.

பொழுது புலர்ந்தது. எதுவுமே அறியாமல் கவலையின்றி இருக்கும் சந்தக் கவிஞரை மக்கள் கண்டனர். ஞான சூரியனை ஊனப்படுத்தும் முயற்சி பலனளிக்காது கண்டு மக்களும் மன்னனும் மனநிறைவு கொண்டனர். "இனி இந்தப்பாவி அழிந்தான்" என மகிழ்ந்தனர். தனது ஆரவார வாழ்க்கை அழிய நேர்ந்ததை எண்ணிச் சோர்வுற்ற சமணன், சூழ்ச்சியொன்றை உருவாக்கி, மன்னன் மூலம் அரசவைக்கு அருணகிரியாரை அழைப்பித்தான். அங்கு இறுமாந்திருந்த சம்பந்தாண்டர்ன், "உன் இஷ்ட தெய்வத்தை அனைவரும் காண இங்கே வரவழைத்துக் காட்ட முடியுமா" எனக் கேட்டான். "நீர் உமது இஷ்ட தெய்வத்தை முதலில் இங்கே வரச்செய்தால், நாமும் நம் வரதனை வரவழைப்போம்" என்றார் அருணை முனிவர். திகிலடைந்த சமணன் நாளை சூரிய உதயத்தினுள்ளே தேவியை வரவழைத்துக் காட்டுவேன் என்று கூறித் தனியான இடம்சென்று வேள்விசெய்து தேவியை உபாசித்து நின்றான். தேவி வரவில்லை. உன் பூசனைக்குக் கட்டுப்பட்ட நான் பன்னிரண்டு ஆண்டுகள் உன் கட்டளையை நிறைவேற்றினேன். அந்தக் காலம் கடந்துவிட்டது. இனி நான் வரமாட்டேன்" என அசரீரி வாக்குக் கேட்டது. இதனைக் கேட்ட சம்பந்தாண்டான் நடுநடுங்கி, "அம்மா தாயே! நீ தோன்றாவிட்டாலும், உன் மகன் சண்முகனை இந்த அரசவைக்கு வரவிடாமற் செய்தால் போதும்" என்று இரந்து மன்றாடி நின்றான். துட்டனின் வார்த்தைக்குப் பதில் கூறாத துர்க்கையின் செயலைக் கண்ட சமணன் "இனி நமக்கு இங்கு இடமில்லை" எனக் கருதி ஊரைவிட்டு ஓடி ஒழித்தான்.

இரவு விலகியது. சமணன் வருவான் எனச் சபையோர் காத்திருந்தனர். மன்னவனும் மற்றவர்களும் அவனை எங்கு தேடியும் காணாததால், "கொடியவன் தொலைந்தான் என உவகை கொண்டனர்.

(தொடரும்...

# வரண்ட பகுதிக்குகந்த வன்னிமரம்

ப. அருந்தவம் அவர்கள்

இன்று நாம் இயற்கை அன்னைக்குச் செய்யும் கேட்டினால் நீண்ட நிலப் பரப்பு வாழ்வதற்கு தகுதியற்றதாகி வருகிறது. குடிநீர் நிலைகள் குடிப்பதற்குரிய தம் தகுதியை இழந்துவிடுகின்றன. காற்று கலப்படமாகி உயிர் வாழ்வதற்கு உகப்பற்றதாக மாறிவருகிறது. கடலன்னை வீறுகொண்டெழுந்து பேரழிவை ஏற்படுத்தி வருகிறாா். வயல் நிலம் தன் விளைச்சல் தகவை இழந்து நிற்கிறது. சூரியபகவான் தன் கடும் வெப்பத்தைப் பூமாதேவிமீது பரப்பி நிற்கிறார். பூமியின் மேற்பரப்பிலுள்ள மண்ணை நீரும், காற்றும் காவு கொண்டு விடுகின்றன. மொத்தத்தில் இப் பிரபஞ்சமே பேரழிவை நோக்கி வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

இதனைத் தடுத்து நிறுத்த முடியாதா? முடியும். நாம் தாவரங்களை அழிக்காது அவற்றைப் பாதுகாப்பதோடு, பயன்பாடின்றியிருக்கும் வெற்று நிலங்களில் விருட்சங்களை நட்டுப் பூமாதேவியினைப் பசுமையாக்கல் மூலம் இப்பிரபஞ்ச அழிவை ஓரளவு தடுக்க முடியும்.

இந்துக்களின் மூன்று முக்கிய கடமைகள் கடவுளை வணங்குதல், தருமம் செய்தல், மரம் வளர்த்தல் எனத் திருமூலர் எடுத்தியம்பியதை யாம் அறிவோம். (2006 ஞானச்சுடர் ஆடிமலர், பக். 31)

எனவே பயனற்ற நிலத்திலும், குறைந்த நீர்த்தேவையுடனும் சிறப்பாக வளரும் வன்னிமரத்தின் சிறப்பை அறிந்து அம்மரத்தை நாட்டிப் பிரபஞ்சத்தைக் காப்போமாக.

**விநாயகனை அர்ச்சிக்க உகந்த வன்னி:**

முன்னொரு காலத்தில் விநாயகப்பெருமானின் அருள்பெற்ற புருசுண்டி என்ற முனிவரை இகழ்ந்து பேசிய மந்தாரனும் அவன் மனையாள் சுமியும் அம்முனிவரின் சாபத்திற்கு ஆளாகினர். புருசுண்டி முனிவரின் சாபத்தால் இருவரும் முறையே மந்தார மரமாகவும், வன்னிமரமாகவும் மாறிவிட்டனர். சிறிது காலத்தில் இவ்விருவரும் தமது தவறை உணர்ந்து விநாயகனை வழிபட்டு அவருடைய அருளால் சாபவிமோசனம் அடைந்தனர். ஆயினும் அவ் இருவரும் விநாயகரிடம் தாமிருவரும் தங்களின் வழிபாட்டிற்குரிய பத்திரம் (இலை) புஷ்பம் (பூ) ஆகவும் இருக்க வேண்டும் என்றும் எம்மைக் கொண்டு தம்மை வழிபடுபவர்க்குத் தாங்கள் அருள்பாலிக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டனர். இதன்படி இன்றும் மந்தரன், சுமி குடும்பத்தினரின் வேண்டுகோட்படி விநாயகனை வன்னிஇலை கொண்டும், மந்தாரை மலர் கொண்டும் வழிபட்டு, வேண்டும் வரங்களை நாம் பெறமுடியும்.

**விநாயகனை அர்ச்சிக்க உகந்த 21 பத்திரங்களில் (இலைகளில்) ஒன்று வன்னி இலை:** விநாயகனை 21வகை இலைகொண்டு அர்ச்சிக்கும் பூசைக்கு சதபத்திர பூஜை என்று பெயர். இதில் பின்வரும் பத்ரங்களால் அர்ச்சிக்கப்படும். அவையாவன,

வன்னி, கரிசலாங்கன்னி, வெண்மருது, கிளுவை, நாகை, மாசிப்பச்சை, சுண்டங்கத்தரி, வில்வதளம், அறுகம்புல், ஊமத்தை, இலந்தை, நாயுருவி, துளசி, மாவிலை, அருளி, விஷ்ணுகிராந்தி, நெல்லி, மருக்கொழுந்து, நொச்சி, ஜாதி, வெள்ளெருக்கு என்பன வாகும்.

**ஹோமம், யாகம் போன்றவற்றின் தீ பெற வன்னிமரம்:**

வன்னிமரக் கட்டையை ஒன்றுடன் ஒன்று உரோஞ்சும் போது தீ பெறப்படும். இவ்வாறு பெறும் தீயே ஹோமம், யாகம் முதலிய நற்காரியங்களுக்கு மிக உகந்ததாகச் சாஸ்திரங்கள் கூறிநிற்கின்றன.

**சனிபகவானுக்கு உகந்த சமித்து வன்னி:**

கோயிற்கிரியைகளின்போது ஹோமங்களில் பல்வேறு சமித்துக்கள் எடுக்கப்படுகின்றன. அவற்றுட்சில அரசு, ஆல், எருக்கு, மா, வன்னி, பலாசு, நாயுருவி, கருங்காலி, அறுகு என்பனவாகும்.

| நவக்கிரகம் | உகந்த சமித்து |
|---|---|
| சூரியன் | எருக்கு |
| சந்திரன் | பலாசு |
| செவ்வாய் | கருங்காலி |
| புதன் | நாயுருவி |
| வியாழன் | அரசு |
| வெள்ளி | அத்தி |
| சனி | வன்னி |
| இராகு | அறுகு |
| கேது | தருப்பை |

எனவே இங்கு சனிபகவானுக்கு உகந்த சமித்து வகையாக வன்னி கொள்ளப்படுவது நோக்கத்தக்கது.

**அக்கினிக்குப் பிரியமானது வன்னி:** எமது மூதாதையர் ஒவ்வொரு தெய்வத்திற்கும் உகந்த பூக்களைக் கூறுகையில் வன்னியை அக்கினிக்கு உகந்ததாக எடுத்தியம்பியுள்ளனர்.

| பூ | பிரியமானதெய்வம் |
|---|---|
| கடம்பு | முருகன் |
| அலரி | பிரம்மா |
| துளசி | திருமால் |
| வன்னி | அக்கினி |
| புன்னை | வாயு |
| எருக்கு | சூரியன் |
| வெண்டாமரை | சரஸ்வதி |

| | |
|---|---|
| வில்வம் | இலக்குமி |
| நீலோற்பலம் | உமாதேவியார் |
| நாயுருவி | யமன் |

**ஷமி விருட்சம் வன்னிமரம்:**

பாண்டவர் வனவாசம் முடித்து அஞ்ஞாதவாசம் கழிக்கும் காலத்தில் அவர்களின் ஆயுதங்களை மறைத்து வைப்பதற்கு வன்னிமரம் உதவியது. எனவே இதன் மகத்துவத்தினால் இதனைப் பாரத இதிகாசம் ஷமி மரம் எனவும் போற்றுகிறது.

**இராமாயணம் போற்றும் வன்னிமரம்:**

இராமாயணத்தில் இராவணனுடன் போருக்குப் புறப்படுமுன் இராமன் வன்னிமரத்தைத் தொழுது அதன் பின்னரே போருக்குச் சென்றதாக அவ் இதிகாசம் எடுத்தியம்பியுள்ளது. இம்மரபைப் பின்பற்றி மராட்டிய வீரர்களும் போருக்குச் செல்லுமுன் வன்னிமரத்தைத் தொழுது, வன்னி இலைப் பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு போருக்குப் புறப்பட்டதாக அறியமுடிகிறது.

**நோய் பிணி தீர்ப்பதில் வன்னி:**

நாட்டுவைத்தியத்தில் வன்னிப்பட்டைச்சாறு நட்டுவக்காலிக் கடிக்குச் சிறந்த அருமருந்தாகப் போற்றப்படுகிறது. அதனைவிடப் பல்வேறுபட்ட வீக்கங்களைப் போக்கவும் வன்னிபட்டைச்சாறு உதவுகிறது.

இந்தியாவில் சில பிரதேசங்களில் கருச்சிதைவு ஏற்படாதிருக்க வன்னிப்பூக்களைச் சர்க்கரை கலந்து உண்போரும் உளர்.

**வன்னிமரத்தின் உயிர்காக்கத் தம்முயிர் ஈந்த தியாகச் செம்மல்கள் முந்நூற்று அறுபத்துமூவர்:**

இந்தியாவின் இராஜஸ்தான் மாநிலத்தில் பாலைவனப் பகுதியை அண்மித்துக் கேஜாடலிக் கிராமம் அமைந்துள்ளது. அக்கிராமத்தில் குரு ஜாம்பாஜி என்பவர் தோற்றம்பெற்று இயற்கையைப் பேணும் வகையில் 29 அறிவுரைகள் அடங்கிய சித்தாந்தத்தை உருவாக்கி மக்களிடையே போதித்தார். இவரது சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டவர்கள் பீஷ்ணாயிகள் (29 அம்சத்தினர்) எனப்பட்டனர்.

ஜாம்பாஜியின் சித்தாந்தத்தில் முக்கியமான அம்சங்களில் ஒன்று "மரத்தை வெட்டாதே, அதன் அருமை பெருமையறிந்து அதனைப் பாதுகாப்பாயாக" என்பது ஆகும்.

இவ் இராஜஸ்தானப் பகுதியில் அஜித்சிங் ஆட்சி நடைபெற்றபோது மன்னனுடன் அடிக்கடி மொகலாய அரசர்கள் போர் செய்தனர். அதனால் தன்னையும், தன் ராஜ்யத்தையும் பாதுகாக்கப் பலமான கோட்டை அமைக்கவேண்டிய தேவை மன்னனுக்கு ஏற்பட்டது. எனவே கோட்டை அமைப்பதற்கு வேண்டிய கற்களைச் சுடுவதற்கு ஏற்படுத்தப்பட்ட சூளைக்கு எரிபொருளாக வன்னிமரங்களை இடுவதற்கு

கேஜாடலிக் கிராமத்தில் அமைவு பெற்றிருந்த வன்னிமரத் தோப்புக்களைத் தறிக்க மன்னன் ஆணையிட்டிருந்தான்.

மன்னனின் ஆணையை எதிர்த்து பீஷ்னாயிகள் மன்னனிடமும், தளபதியிடமும் முறையிட்டு அழுது புலம்பினர். அதனால் எதுவித பலனுமில்லை. மரத்தை வெட்ட ஒரு படையே வந்தது. அப்படை வன்னிமரத்தை வெட்டச்சென்றபோது பீஷ்னாயி இன மக்கள் வன்னிமரத்தை இறுகக் கட்டியணைத்து வெட்டவிடாது தடுத்தனர். அப்போது மரங்களை வெட்டவந்த அஜித்சிங்படை 363பேரின் தலைகளை வெட்டியும் ஒரு வன்னிமரத்தைக்கூட வெட்டி நிலத்தில் வீழ்த்த முடியவில்லை. இவ் உயிர்த்தியாகத்திற்கு அஞ்சிய மன்னன் வன்னிமரக் காட்டிற்கு உயிர்ப்பிட்சை அளித்தான் என வரலாறு கூறுகிறது.

இன்றும் கேஜாடலி கிராமத்தில் பீஷ்னாயி இன மக்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்நிகழ்வினை நினைவு கூர்ந்து கூடிப் பிரார்த்தனை செய்வது இடம்பெற்றுவருகிறது.

**தலவிருட்சமாக வன்னிமரம்:**

ஆலயங்களில் தலவிருட்சம் வைத்துப் பேணலின் முக்கியத்துவத்தை ஆகமம் உணர்த்தியுள்ளது. அந்தவகையில் ஈழவளநாட்டின் தேவாரப்பாடல்பெற்ற திருக்கேதீஸ்வரத்தின் தலவிருட்சமாகப் போற்றப்படுவதும் இவ் வன்னிமரமேயாகும். இதேபோல் வரலாற்றுப் புகழ்மிக்க நயினை நாகபூஷணியம்மன் ஆலயத்தின் தலவிருட்சமாகப் கொள்ளப்படுவதும் இவ் வன்னிமரமே என்பதும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

***வன்னிமரத்தை நாட்டி அகமகிழ்வோம்:***

இந்துக்களின் வாழ்வியலுடனும், சமயநெறிமுறைகளுடனும் தொடர்புடைய வன்னிமரத்தை மற்றய பயிர்களோ அல்லது மரங்களோ நாட்டிப் பராமரிக்கக் கடினமான தரைகளிலேயேனும் நாட்டிப் பராமரிப்போம்.

வன்னிமரமானது மணற்பாங்கான உவர்நிலப்பகுதியிலும் 300-400மில்லி வரை குறைந்த மழைபெறும் இடங்களிலும்கூட நின்று நிலைத்து வளரக்கூடியது. அதுமட்டுமன்றி காற்றால் மண் அரித்துச் செல்லப்படுவதை தடுக்கும் வல்லமை வன்னிமரத்திற்குண்டு.

எனவே நாம் கவனிப்பாறற்றிருக்கும் நிலங்களில் வன்னிமரத்தை நாட்டி நமது சூழலிற்கும், சமயத்திற்கும், நாட்டிற்கும் நன்மைகள் பல வருவிப்போமாக.

"எவன் ஒருவன் ஓர் மரத்தையாவது நட்டு சீரும் சிறப்புமாக வளர்க்கிறானோ அவன் மறுமையில் இந்திரனுடன் மூன்று ஆயுத வருஷங்கள் வசிப்பான்".

-விருஷாயுர்வேதம்-

குறிப்பு: ஆயுத வருஷம் என்பது பதினாயிரம் வருஷம் என்பதனைக் குறிக்கும்.

உ

(தொடர்ச்சி...

# தவமுனிவனின் தமிழ் மந்திரம்

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள்

ஆடு அகம் சீர் மணிக் குன்றாக நின்று தில்லையிலே ஆனந்தத்தாண்டவ மாடும் நடராஜப் பெருமானின் வடிவம் ஐந்தொழில்களாகிய பஞ்சகிருத்தியத் தினை விளக்குகிறது. உடுக்கு ஏந்திய கை படைத்தலையும், அபயகரம் காத் தலையும், தீ ஏந்திய கை அழித்தலையும், முயலகன்மீது ஊன்றிய திருவடி மறைத் தலையும் தூக்கிய திருவடியாகிய குஞ்சிதபாதம் அருளலையும் குறிக்கிறது. மெய்கண்ட சாஸ்திர நூல்களில் ஒன் றாகிய திருவதிகை மனவாசகம் கடந்தார் அருளிய உண்மை விளக்கம் என்ற நூலில் வரும் பாடல் பஞ்சகிருத்திய வடிவத்தின் செயற்பாட்டினைத் தெளிவாக விளக்குகிறது.

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

திதி என்பதற்கு காக்கப்படுதல் என்பது பொருள் ஆகும். சர்வசிருஷ்டி என்ற தலைப்பினை அடுத்து திதி என்பது வைக்கப்பட்டுள்ளது. உயிர்கள் ஆன்ம விடுதலையாகிய முத்திநிலையினை அடையும்வரை காத்தல் நடைபெறுகிறது. அறிவுமயமான ஆன்மா பூரண வியாபகத் துடன் விளங்காமல் இருப்பதற்கு தடை யாக இருப்பது ஆணவமலமாகும். ஆண வத்தை நீக்கி ஆன்மாவை வியாபிக்கச் செய்வதாகிய காத்தல் தொழிலை இறை வனே செய்கிறான்.

ஏகம் ஸத் (உள்பொருள் ஒன்றே) என்பதே வேதங்களின் முடிபாகும். ஒரு தெய்வ சக்திதான் இந்த உலகங்களை யெல்லாம் திரும்பத்திரும்பப் படைத்துக் காத்து அழிக்கவும் செய்கிறது. அதே சக்திதான் உடலோடு உயிரைக் கூட்டு கிறது, காப்பாற்றுகிறது, பின்பு நீக்குகிறது. உடலாகவும் உயிராகவும், கடலாகவும், மேகம் சூழ்ந்து மழை பொழிகிற வான மாகவும், நிற்கின்ற அந்தத் தெய்வம் இடைவெளியில் உள்ள ஆகாசமாகவும், நீக்கமற நிறைந்திருக்கின்றார். தமது அடிய வர்களை அன்பினால் இழுக்கும் விசால மான கண்களையும் உடையவராகக் காணப்படுகின்றார். அடியவர்கள் இறை வனின் அருட்பார்வைக்கு உட்படுவார்கள் என்பதைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

உடலாய் உயிராய் உலகமதாகிப்
கடலாய் கார்முகில் நீர்பொழில் வானாய்
இடையாய் உலப்பிலி எங்குந் தானாகி
அடையாய் பெருவிழி அண்ணல் நின்றானே

உயிர்கள் எத்துணை அணுகி நின்றாலும் இறைவன் அவற்றால் எட்ட முடியாத தொலைவிலேயே இருப்பான். சிவயோக சாதனையால் அவனைக் கூடினாலும் பதிஞானம் சிறிதளவே நல்குவான். அவன் பூவுலகில் பல உயிர்களும் ஆகி நின்றான். அச்சீவர்கள் தன்னை வழிபட்டாலும் ஆணவம், ஆன்மபோதம் முதலியவை அடங்கப்பெற்றாலும் அவர்களுக்கு அருளுடல் வழங்கி வீடுபேறு அளிப்பவன் அந்தத் தலைவனே எனத் திருமூலர் கூறுகின்றார். இதில் இறைவன் தலைவன் என்பதையும், அவன் உயிர்களுடன் ஒன்றாகியும் உடனாகியும் அவற்றினின்று வேறாகியும் இருக்கிறான் என்பதையும் தெளிவாகக் கூறுகின்றார். சைவசித்தாந்தம் கூறும் அத்வைத முத்தி என்பதன் விளக்கம் இதுவேயாகும்.

அணுகினும் சேயவன் அங்கியிற் கூடி
நணுகினும் ஞானக் கொழுந்து ஒன்று நல்கும்
பணிகினும் பார்மிசைப் பல்லுயிர் ஆகித்
தணிகினும் மண் உடல் அண்ணல் செய்வானே

சங்கரன் செய்வது சங்காரம். சங்காரம் என்றால் ஒடுக்குதல், அழித்தல் என்று திருமந்திரம் கூறவில்லை. சங்காரம் என்பதை இளைப்பாற்றுதல் என்னும் பொருளிலேயே திருமூலர் வழங்கியுள்ளார். செந்தழல் போன்ற திருமேனியை உடைய சிவபெருமானே சங்கார காரணனாகின்றான். அவன் சிரித்தாலும் நெருப்புப்பொறி எழுகிறது. சினந்தாலும் தீப்பொறி பறக்கிறது. அவன் கையிலும் நெருப்பு கதழ்கின்றது. அவன் கையிலும் நெருப்பு கனல்கிறது.

அழித்தல் தொழிலைச் செய்பவனாகிய சிவன் ஆன்மாவிற்கு வைத்த அழியாத இடமொன்றுண்டு. அதை அடைதற்பொருட்டே உயிர்களையும் கருவிகளையும் தந்தான். உயிர் உணர்வினால் சிவமாகிய தன்னை அனுபவிக்க வைத்தார். ஆகாமிய வினையையும், சஞ்சித வினையையும் அவனது அருளால் பொசுங்குமாறு செய்வித்தான்.

தீயவைத்து ஆர்மின்கள் சேரும் வினைதனை
மாயவைத்தான் வைத்த வண்பதி ஒன்றுண்டு
காயம் வைத்தான் கலந்தெங்கு நினைப்பதோ
ஆயம் வைத்தான் உணர்வு ஆர வைத்தானே.

உடம்பினுள் நின்று இயக்குகிற ஆன்மாவோடு இறைவனும் உடனிருக்கின்றான். அப்படி எப்போதும் உடன் நிற்கிற இறைவனுடைய சொரூபத்தை ஆன்மா அறிவதில்லை. ஆன்மாவிற்குள் நிற்கிற ஒப்பற்ற தலைவனை ஒளிமயமாக உள்ளே நிற்கின்ற அந்தப் பரஞ்சுடரை, ஆன்மாவை விட்டு விலகிப்போகாமல் நிற்கின்ற அந்தப் பரம்பொருளை ஆன்மா அறியாமல் நிற்கிறது.

பரமேஸ்வரன் நம்முள்ளே இருக்கின்றான். சர்வாந்தர்யாமியாக நிற்கின்ற அவனே நம்முடைய இதயக்குகையில் இருக்கின்றான். சுயம் ஜோதியாகப் பிரகாசிக்கின்றான். "ஜோதிஷயம்பதயே" என்றே வேதங்களும் கூறுகின்றன.

இறைவனை மையமாகக்கொண்டு வாழும்வாழ்க்கை அர்த்தமுடையது.

உள்ளத்தினுள்ளே இருந்தும் அஞ்ஞானத்தினால் ஆணவ மலத்தினால் நாம் அவனை அறியமுடியாது அல்லல்ப்படுகின்றோம். சுயம் ஜோதியாக நம்முள்ளே நின்று ஒளிவீசுகின்ற பரதத்துவத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும் என உபதேசிக்கின்றார்.

உள்ளத்தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் அவனும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறியாதே.

உலகத்தின் தோற்றமும் இந்த உடம்பின் தோற்றமும், இந்த உடம்புக்குள்ளே உயிர் நிற்பதும் பின்பு பிரிவதும் எல்லாமே ஈசன்செயல் எனத் தவயோகி கூறுகிறார். ஒரே மண்ணைக்கொண்டு பல பாண்டங்களைப் பல உருவங்களிலே பல தன்மைகளிலே செய்கிற குயவனைப் போல இறைவனும் பல்வேறு உருவங்களைத் தனது விருப்பப்படி தோற்றுவிக்கின்றான்.

குசவன் திரிகையில் ஏற்றிய மண்ணைக்
குசவன் மனத்துற்றதெல்லாம் வனைவன்
குசவனைப்போல் எங்கள் கோன் நந்தி வேண்டில்
அசைவில் உலகம் அது இதுவாமே

கர்ப்பக்கிரியை என்பது திருமந்திரத்தின் இரண்டாவது தந்திரத்தில் பதினான்காவது அதிகாரமாக உள்ளது. கர்ப்பம் என்பதற்கு கரு என்பது பொருள். கிரியை என்பதற்குச் செயல் என்பது பொருள். கருவை உருவாக்கி வெளிப்படுத்துகின்ற இறைவனது திருவருட் செயலை கரு உற்பத்தி என்ற அதிகாரத்தின் ஊடாகத் திருமூலர் விளக்குகின்றார். கருத்தோன்றுவதற்கு மூலகாரணன் இறைவன் எனக் கூறுகின்றார். ஆண் பெண் கூட்டுறவால் தோன்றுகின்ற சிற்றின்பத்தைப் பேரின்பமாகக் கருதி இன்புற்றுத் தாம் பெற்ற குழந்தைகளைப் பேணி வளர்த்துப் பெருமகிழ்ச்சி அடைகின்ற மக்கள் இவையெல்லாம் இறைவன் திருவருட் செயல்கள் என்பதை உணரவேண்டும் என்கிறார்.

கருவிலே இருக்கின்ற போதும் அறிவு வெளிப்படாத நிலையிலும் இறைவனை எண்ணி இன்புறுதல் வேண்டும் என்ற தனது விருப்பத்தைக் "கருவாய்க் கிடந்து உன் கழலே நினையும் கருத்து உடையேன்" என அப்பர் பெருமான் தனது தேவாரப்பாடலில் குறிப்பிடுகின்றார்.

இன்று மேற்கத்தைய மருத்துவ விஞ்ஞானத்தினை மகப்பேற்று நிபுணர்களாகக் கடமையாற்றும் மருத்துவர்கள் கருவைக் காப்பதற்கும், கருவராமல் தடுப்பதற்குமான ஆலோசனைகளைக் கூறுவார்கள். ஆனால் சக்கரவர்த்தி தவராச யோகியாகிய திருமூலர் சிறந்த குழந்தைக்கு உரிய கரு தோன்றுவதற்கு வழி யாது என்பதையும் குறைபாடு உடைய குழந்தைக்கு உரிய கரு எவ்வாறு தோன்றுகிறது என்பதையும் திருமந்திரத்தின் ஊடாக விளக்கிக் கூறியுள்ளார்.

இவர் கூறியுள்ள கருத்துக்கள் இன்ப நுகர்ச்சியில் தலைப்படும் மக்களுக்குச் சிறந்த அறிவுரையாக விளங்குகின்றது.

சுக்கிலத்தைச் செலுத்தும் வாயுவுக்கு ஏற்பக் குழந்தையின் அங்கம் அமையும் எனத் திருமந்திரம் குறிப்பிடுகிறது. விந்துவைச் செலுத்தும் வாயு குறைந்தால் குழவி குள்ளமாகப் பிறக்கும். வாயு மெலிந்தால் மூடமாகும். அவ்வாயு தடைப்பட்டால் குழந்தை கூனாய்ப் பிறக்கும். ஆனால் மாதரின் வாயு இவ்வகையில் பாதிப்பு எதையும் ஏற்படுத்துவதில்லை.

பாய்கின்ற வாயு குறையின் குறள் ஆகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடம் ஆகும்
பாய்கின்ற வாயு தடுப்படில் கூன் ஆகும்
பாய்கின்ற வாயு மாதர்க்கு இல்லைப் பார்க்கிலே

இன்ப நுகர்ச்சிக் காலத்தில் ஆண்மகனிடம் மூச்சு ஓட்டம் சூரிய கலையில் வலப்பக்கத்து நாசியில் இயங்கினால் ஆண் குழந்தை பிறக்கும். சந்திர கலையில் இடப்பக்க நாசியில் இயங்கினால் பெண் குழந்தை பிறக்கும். விந்துவோடு செல்லும் பிராண வாயுவை அபானவாயு எதிர்த்தால் இரட்டைக் குழந்தை பிறக்கும். மூச்சுக்காற்று இடகலை பிங்கலைகளில் ஒரேநேரத்தில் இயங்கினால் குழந்தை அலியாகப் பிறக்கும்.

குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்
குழவியும் இரண்டாம் அபானன் எதிர்க்கில்
குழவி அலி ஆகும் கொண்ட கால ஒக்கிலே

இன்பம் நுகரும் இருவர்க்கும் மூச்சுக்காற்று ஒத்தியங்குமானால் குழந்தை அழகாகப் பிறக்கும். புணரும் காலத்தில் ஆண்பெண் இருவருக்கும் உயிர்ப்புத் தடுமாறினால் பெண்ணுக்கு கரு உண்டாக வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

கொண்ட நல்வாயு இருவர்க்கும் ஒத்தெழில்
கொண்ட குழவியும் கோமளமாயிடுங்
கொண்ட நல்வாயு இருவர்க்கும் குழறிடில்
கொண்டது மில்லையாம் கோல் வளையாட்கே

கருவிற்கு காரணமான தந்தையும் அக்குழந்தை என்ன குழந்தை என அறிய மாட்டான். அதனை ஏற்றுக்கொண்ட தாயும் அறியமாட்டாள். படைப்புக் கடவுளாகிய நான்முகனாகிய தட்டானும் அறிந்தும் ஒருவருக்கும் கூறவில்லை. சதாசிவனாகிய சிவனும் அங்கே இருந்தும் அவனும் உணர்த்தவில்லை. மாயையின் மயக்கம் ஒருவரையும் உணரவிடவில்லை.

இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்
தட்டான் அறிந்தும் ஒருவர்க்கு உணர்த்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்கு உளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மை எவ்வாறே.

கருவில் கருவளரும் வகையைத் திருமந்திரம் தெளிவாக விளக்குகிறது. குயில் தனது முட்டையைக் காக்கையின் கூட்டின் இட தன்முட்டை என்று எண்ணியே காக்கை வளர்க்கின்றது. இதே போல ஓர் உயிர்க்கு இறைவன் அளித்த உடல் தாயின் வயிற்றில் கருவாக இடப் பட தாயும் தன் குழந்தை என்று மயக்கத் தால் எண்ணிப் பத்து மாதமும் கருவைக் காக்கின்றாள்.

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டு இட்டால்
அயர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின்றது போல்
இயக்கு இல்லை போக்கு இல்லை ஏன்என்பது இல்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்றவாறே

இறைவன் இயல்பாகவே தன்னிடம் அமைந்துள்ள ஆற்றலாகிய அருளால் கருவினுள் இருந்து உயிர்களுக்கு உதவுகின்றான். இவ்வருள் சூரியனிடத்து ஒளிபோல இறைவனுடன் பிரியாமல் இணைந்திருக்கின்றது. அவனின்றி அருளில்லை, அருளின்றி அவனில்லை என்ற உண்மை இதனால் பெறப்படுகிறது. இக்கருத்து அமைந்த செய்யுள் ஒன்று சிவஞான சித்தியாரிலே காணப்படுகிறது.

அருளது சக்தியாகும் அரன்தனக்கு அருளையின்றித்
தெருள் சிவம் இல்லை அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை
மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்கு
இருளிலை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்

காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் பரம்பொருளே, கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் உணவளிப்பவன். அனைத்துயிர்களையும் காப்பாற்றும் இறைவன் தன் அடியவனைக் கைவிடவா போகிறான். "நம்பினார் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு" என்ற உண்மையைப் பின்வரும் தனிப்பாடல் ஒன்று தெளிவாக விளக்குகிறது.

கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
விருப்புற்று அமுதளிக்கும் மெய்யன் - உருப்பெற்றால்
ஊட்டி வளர்க்கானோ ஓ கெடுவாய் அண்ணாய் கேள்
வாட்டம் உனக்கேன் மகிழ்.

(தொடரும்...

---

பிறருக்கு நீ எதனை எடுத்து வழங்குகிறாயோ அதுவே உனக்கு சொந்தமாகிறது. பிறருக்கு ஆனந்தத்தை வழங்கினால் அது உனக்கு சொந்தமாகிறது. பிறருக்கு நீ நன்மை செய்வாயானால் அது உனக்கே சொந்தமாகிறது.

-சுவாமி சிவானந்தர்-

சேற்றில் உள்ள முள்ளும் வேட்டைநாயின் பல்லும் இனவாதியின் சொல்லும் அதிகமாகக் குத்தும்.

உ

# கடவுளுக்குக் கண் இல்லையா?

திரு கோப்பாய் சிவம் அவர்கள்

"கண்கெட்ட கடவுள்" என்று ஏசுகின்றவர்களையும் "கடவுளுக்குக் கண் இல்லையா?" என்று கேட்பவர்களையும் நாம் காண்கின்றோம். அதுவும் இன்று நம் ஈழநாட்டிலே தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்துவரும் நிலையில் விரக்தியின் எல்லையில் நிற்பவர்கள் தாம் படுகின்ற துன்பத்தைக் கடவுள்கூடப் பார்க்கிறாரில்லையே என்ற வேதனையுடன் இவ்வாறு கேட்கின்றார்கள். அப்பாவிகள் வெளிப்படையாக இப்படிக் கேட்கின்றார்கள். சமயப்பற்று மிக்கவர்களும், தத்துவ உண்மைகள் புரிந்தவர்களும் அறிஞர் பெருமக்களும் கூட வெளிப்படையாகக் கேட்காவிட்டாலும் இவ்வாறு தமக்குள் எண்ணுகின்ற பெரும் துன்பநிலைமை இன்று உள்ளது.

முன்பு எப்போதும் இல்லாத வகையில் இப்போது நமது நாட்டில் ஆலயங்கள் புதிது புதிதாக அமைக்கப்படுவதும் பழைய ஆலயங்கள் புதுப்பிக்கப் படுவதும் கும்பாபிஷேகம், சங்காபிஷேகம், மஹோற்சவம், இலட்சார்ச்சனை என்று அமர்க்களப்பட்டுக்கொண்டிருப்பதும் நிதர்சனமான உண்மைகள். முன்பு கோவில், குளம் என்று பார்த்தறியாதவர்கள் பலரும் இன்று புதுக்கருத்துடன் கோவில்களை வலம் வருகிறார்கள். இவை எல்லாம் நடைபெற்றாலும் நமது துன்பம் குறையவில்லையே. அது ஏன்? என்பதுதான் பலருக்கும் முன்னே உள்ள கேள்வி.

கொஞ்சம் நிதானமாகச் சிந்தித்து. ஆராய்ந்து பார்க்கலாம். நம்மை நாமே அலசி ஆராய்ந்து நமது செயல்களை மூன்றாம் மனிதனாக நின்று விசாரித்துப் பார்த்தால், கடவுள் நன்றாகக் கண்ணைத் திறந்து நம்மையும் நமது செயல்களையும் கவனிப்பதால்தான் நமக்கு இத்தகைய வாழ்க்கையைத் தருகிறார் என்பது புரியும். இது ஒரு வித்தியாசமான பார்வை என்பதால் அன்பர்கள் யாரும் கோபம் கொள்ளாமல் இதிலுள்ள உண்மை நிலைகளை உணரவேண்டும் எனப் பணிவோடு விண்ணப்பிக்கப்படுகிறது.

"செயல்கள் சமனாயிருந்தாலும் இவ்வுலகில் அவற்றின் பலன் வெவ்வேறாக இருப்பதேன்?" என்ற நாரதமுனிவரின் கேள்விக்கு ஸ்ரீமத் நாராயணன் கூறும் பதில் தேவி பாகவதத்தில் வருகிறது. "செயல்புரிபவரின் சிரத்தைக்குத் தக்கபடியே பலன்களும் வேறுபடுகின்றன"

கிரியைகள், சம்பிரதாயங்கள், சடங்குகள் இவற்றில் பல சிறப்பம்சங்கள் உள்ளன. அவற்றைப் புரிந்துகொள்ள முடியாத காரணத்தால் வெறுத்தொதுக்காது நம்பிக்கையோடு அவற்றை அணுகி எமது அறிவுக்கு எட்டியவரை ஆராய்ந்து அவற்றிலுள்ள தத்துவ உட்பொருளை விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

கிரியைகள், சிறப்புறுவதும் பயனளிப்பதும் நான்கு முக்கிய அம்சங்களில் தங்கியிருக்கின்றன. சரியான மந்திரங்களைச் சரியான உச்சரிப்புடன், பயன்படுத்துவது முதலாவது அம்சம்.

அதிகம் சொல்ல விரும்புபவன் குறைவான வார்த்தைகளையே பயன்படுத்துவான்.

இரண்டாவது அம்சம் மனோசக்திசெய்யப்படும் எந்தக் காரியமும் வெற்றியடைவதும், தோல்வியடைவதும் செய்பவர்களின் மனோபலத்தை பொறுத்ததே. கிரியைகளைச் செய்பவரும் செய்விப்பவரும் சலனமில்லாத நம்பிக்கையும் பரிபூரணமான இறைபக்தியும் உடையவர்களாகச் சிரத்தையுடனும், இலயிப்புடனும் அவற்றில் ஈடுபடவேண்டும். கயிற்றின்மேல் நடப்பவன் தன் கவனத்தை வேறெங்கும் சிதறவிடாமல் கயிற்றிலேயே தனது மனத்தை ஒருமுகப்படுத்தி வெற்றி பெறுகிறான். சங்கீத சாதகன் பாடிக்கொண்டிருக்கும்போது தனது கவனத்தை வேறிடத்தில் செல்லவிட்டால் இலயம் தப்பிவிடுகிறது. இலயிப்பு இல்லாவிட்டால் இலயம் தப்பிவிடும்.

இதேபோலவே கிரியைகளில் ஈடுபடும்போது ஆத்மார்த்தமான ஈடுபாடும், தன்னம்பிக்கையும், இறைநம்பிக்கையும் மன ஒருமைப்பாடும் இருந்தால்தான் பூரண பலனைக் காணமுடியும்.

மனோசக்தியின் பயன்பாடுகள் பற்றியும், சாதனைகள் பற்றியும் மனோதத்துவ விஞ்ஞானம் எவ்வளவோ செய்திகளை ஆதாரபூர்வமாகக் கூறுகிறது. வைத்திய போதனைகளில் மனோவசிய முறை நன்கு பயன்படுத்தப்படுகிறது. ஒரு வைத்தியரின் போதனைகளால், அவரிடம் நோயாளி வைக்கின்ற நம்பிக்கையால் அரைப்பங்கு நோய் குணமாகிவிடுகிறது. மேலும், சுயவசியமுறைப்படி தனது உடலுறுப்புக்களைத் தானே வசப்படுத்திச் சில நோய்களை மாற்றிவிடக்கூடிய சக்தி மனவலிமைக்கு உண்டு. விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்தால், நமது கிரியைகளில் மனோசக்தி எவ்வளவு தூரம் சிறப்பிடம் வகிக்கின்றது என்பது விளங்கும்.

கிரியைகளில் வெற்றியை நிர்ணயிக்கும் மூன்றாவது அம்சம் தலச்சிறப்பு. கிரியை நிகழும் ஸ்தானம், அதன் சூழல் என்பன கிரியைகள் நிகழ்வதற்குகந்த முறையில் சாஸ்திர விதிப்படி அமைந்திருப்பது அவசியம். வீட்டிலே நிகழும் கிரியைகளுக்காக அதற்கேற்ற வகையில் இடத்தை ஒழுங்கு செய்வதைக் காண்கின்றோம். ஆலயங்களில் நிகழும் கிரியைகளுக்கும் யாக மண்டபங்கள், வேதிகைகள், கும்பங்கள் முதலியன விதிப்படி அமையவேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல, ஆலயமே ஆகம விதிப்படி ஒழுங்காக அமைக்கப்பட்டிருந்தால் தான் அங்கு நிகழும் கிரியைகள் நாம் எதிர்பார்க்கும் பலனைப் பூரணமாகத் தரும்.

நான்காவது அம்சம் நமது சைவ சமயிகளுக்கும், தமிழருக்கும் மிகச்சிறப்பாகக் கருதப்படும் சதாசாரமும், தூய்மையுமாகும். ஆசாரம் என்றால் ஒழுக்கம். ஒழுக்கம் என்பது வாழ்க்கையை முறைப்படி நடாத்தவேண்டிய நல்வழி.

கிரியைகளை நடாத்தும் சிவாச்சாரியார்கள் எப்படி இருக்க வேண்டும், அவர்கள் எப்படி ஒழுகவேண்டும், அவர்கள் எத்தகைய அநுஷ்டானங்களைக் கைக்கொள்ள வேண்டும் என்று சிவாகமங்களில் ஆசார்ய லக்ஷணம் என்ற பகுதியில் விதந்துரைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை அனுசரிக்கவேண்டிய கடமை சிவாச்சாரியார்களுக்குண்டு. அதேபோல் அவர்களைக் கொண்டு கிரியைகளைச் செய்விக்கும் எஜமானர்களும் தத்தமக்கு விதிக்கப்பட்ட ஆசார ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்க வேண்டியவர்களாவர்.

ஒழுக்கம் மட்டுமின்றித் தூய்மை என்னும் சுத்தமும் கிரியைகளுக்கு மிக முக்கியமான அடிப்படையாகும். மனம், வாக்கு, காயம் (நினைவு, சொல், செயல்) என்ற மூன்றினாலும் இந்தத் தூய்மை பேணப்படவேண்டும்.

விஞ்ஞானப் பரிசோதனைகளை ஆய்வுகூடங்களில் நடாத்தும்போது குறித்த விதிமுறைகளில் சிறுதவறு நேரிடினும் எதிர்பார்த்ததற்கு மாறான விளைவுகள் ஏற்படுவதை மாணவர்கள் அவதானித்திருப்பர். நமது சைவக் கிரியைகளிலும் இந்த நான்கு அம்சங்களும் சீரானமுறையில் அனுசரிக்கப்படும் போது மாத்திரமே அபரிதமான அருட்சக்தி பிரவகித்து ஆனந்த வாழ்வை அளிக்கும். இவற்றில் ஏற்படும் தவறுகள், குறைபாடுகள் நாம் எதிர்பார்த்த அளவு பலனைக் கொடுக்காது என்பதுடன் சில எதிர் விளைவுகளையும் ஏற்படுத்தலாம்.

தவறு ஏற்பட்டுவிட்டால் பெரும் தீமையை அனுபவிக்கநேருமே என்று பயங்கொள்வதற்காக இங்கு இவ்விஷயம் சுட்டிக்காட்டப்படவில்லை. எதிர்மறையாக, முறைப்படி நடைபெற்றால் முழுப்பலனையும் பெறலாம் என்பதே உணரப்பட வேண்டியது. ஆழ்ந்த பக்தியும், உண்மையான நம்பிக்கையும் இருக்குமானால் கிரியைகளில் தற்செயலாக ஏற்படும் தவறுகள் பலனைக் குறைக்குமல்லாமல் தீமையை நல்கா என்பது திண்ணம்.

இன்று பலகிப்பெருகிவரும் ஆலயங்கள் மேற்கூறிய அம்சங்களை மனங் கொள்கின்றனவா? பார்க்குமிடமெல்லாம் கோவில்கள். சில கோவில்களில் விளக் கெரிப்பதற்கே எண்ணெய்க்கு வழியில்லாமல் இருள்சூழ்ந்திருக்க, இன்னும் சில கோவில்களில் தேவைக்குவிஞ்சி வளம் கொட்டிக் கிடக்கிறது. இந்த வளம் சரியான வழிகளில் பிரயோகிக்கப்படுகிறதா என்பதே கேள்வி. ஆலய விழாக்கள் பல ஆடம்பர விளம்பரங்களாகவே நடைபெறுகின்றன. இறைவழிபாட்டுக்கு வேண்டிய பொருட்கள் எவை எனத் தெரிந்துகொள்வதிலும் அவற்றைப் புனிதமானதாகவும் போதுமானதாகவும் தேடிக்கொள்வதிலும் காட்டப்படும் அக்கறையைவிட வெளிப்படையான பகட்டிலே அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. எங்கும் பணம்தான் ஆட்சிசெய்கிறது. அதனை வெளிச்சம் போட்டுக்காட்டும் வகையில் சர்வாலங்கார பூஷிதர்களாக ஆலயங்களில் வலம்வருபவர்கள் பலரை நாம் காணமுடிகிறதே அல்லாமல் தொண்டர்கள் எவரையும் காணமுடிவதில்லையே.

இப்போதெல்லாம் குடை, தீவர்த்தி பிடிப்பதற்கும் விளக்குக்கள் தேய்த்தல், கூட்டுதல், கழுவுதல் போன்ற சரியைத் தொண்டுகளுக்கும் அதிகமான ஆலயங்களில் பல வேலைகாரர் என்ற பெயரில் சம்பளத்திற்கு ஆட்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதே நமது தொண்டுள்ளங்களை நாம் மூடிவிட்டோம் என்பதற்கு அடையாளமாகும். இறைவனை நோக்கி நாம் அண்மித்துச் செல்வதற்கான முதற்படி இந்தச் சரியைத் தொண்டுகள்தான். இவைதான் நமது ஆணவ முனைப்பைக் குறைக்க உதவுபவை. இன்று நாம் ஆலயத்துடன் தொடர்புகளை வைத்திருப்பதே நமது ஆணவத்தை வளர்ப்பதற்குத்தானோ என எண்ணத்தோன்றுகிறது.

எதை எடுத்தாலும் பெயர், புகழ் வேண்டியே செய்கிறோம் என்பதற்கு

வறுமையிலும் நிறைவு காணும் ஏழையே மிகப்பெரிய செல்வனாவான்.

ஆலயங்களின் சுவர்களிலும் படங்களின் கீழும் திரைச்சீலைகளிலும் குத்துவிளக்கு முதலிய பொருட்களிலும் நாம் பதித்து வைத்திருக்கின்ற நமது பெயர்களே எடுத்துக்காட்டாகும்.

நூற்றுக்கணக்கான பக்தர்கள் அர்ச்சனை செய்யக் காத்திருக்கின்ற வேளையிலும்கூட ஒரேஒரு அர்ச்சனைத் துண்டைக் கொடுத்துவிட்டு நமது ஊரிலும் நமது நாட்டிலும் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் இருக்கின்ற நமது உறவினர்கள் நண்பர்கள் என்று சுமார் பதினைந்து இருபது பெயர்களை (அம்மா, அப்பா, மாமா, மாமி, பேரன், பேர்த்தி, தம்பியின் மாமா, அண்ணாவின் மாமியின் தங்கை.....) நாம் அடுக்கிக்கொண்டு போகும்பொழுது "சுவாமி எனக்கும் என்னுடையவர்களுக்கும் மட்டும் எல்லா நலன்களையும் தர வேண்டும்" என்று வேண்டிக்கொள்கின்ற நமது சுயநலம் வெட்டவெளிச்சமாகி விடுகிறது.

இவ்வளவும் ஏன்? நமது ஆலயங்களில் சுமார் ஐம்பது வீதமானவை இன்று நீதிமன்றங்களினால் நிர்வகிக்கப்படுகின்றன. அதிகாரப்போட்டி, பதவிமோகம் என்பவற்றுக்கு ஆலயங்கள்தாம் நிலைக்களனாக இருக்கின்றன.

இறையருள் கிட்டுவதற்கான மூல காரணங்களுள் ஒன்றான மனோநிலை, நம்பிக்கை என்பன எப்படி இருக்கிறதென்று பார்த்தோம். அடுத்தது ஒழுக்கம். ஒழுங்குமுறை, தூய்மை, புனிதம் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றியும் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது. தூயபொருட்கள் எல்லாவற்றிலும் தூய்மையானது பசுநெய். அக்கினியில் இடப்படும் பொருட்களை நெய்யினால் அபிகாரம் செய்து தூய்மைப்படுத்திய பின்தான் ஆகுதியாக வழங்குவர். ஏனென்றால் அக்கினி அத்தனை புனிதமானது. ஆலயங்களில் நிகழும் ஹோமங்களில் புனிதத்தன்மை பேணப்படுவதன் அவசியத்திற்காகவே குற்றம் பொறுக்காத அக்கினி பற்றியும் குற்றமே இல்லாத பசுநெய் பற்றியும் கூறப்பட்டது. இந்தத் தூய்மையான பசுநெய்யையே ஹோமத்திற்கு முன் தூய்மை செய்வதற்காக "ஆஜ்ய சம்ஸ்காரம்" என்று ஒரு கிரியை இருக்கிறது என்றால் புனிதத்தின் முக்கியத்துவம் புரிகிறதல்லவா?

இன்று நெய்யை அக்கினியில் இட்டால் கண்ணீர் வருகிறது. அப்படி ஒரு புகை எவ்வாறு உண்டாகிறது? அது மட்டுமல்லாமல் வெடிக்கவும் செய்கிறது. ஆனால் உருகமட்டும் காணோம். அப்படியானால் இறைவன் எப்படி மனம் உருகுவார். அத்தனைதூரம் கலப்படமான பொருட்களையே நாம் இன்று இறைவனுக்கு வழங்குகிறோம். சமித்துக்கள் கட்டிவரும் கயிறு எது தெரியுமா? ரயர்க் கயிறு. எச்சிலும் மலசலமும் தூசியும் அழுக்கும் நிறைந்த வீதிகளில் நாளும் ஓடித்திரிந்த வாகனங்களின் ரயர்களில் வெட்டி எடுக்கப்படும் கயிறு எவ்வளவு தூய்மையானது? அதனால்த்தான் ஹோமச்சுள்ளிகள் கட்டிவருகின்றன. அதனைத்தான் அக்கினியில் போடுகின்றோம்.

மாமிச போசனம் அருந்துவோர் முற்காலத்தில் மிகக்குறைவு. அவர்களை மற்றவர்கள் மதிப்பதில்லை. ஏனெனில் அவர்கள் அசுத்தமானவர்கள். அவர்கள் அவற்றைத் தவிர்க்கும் நாள்களில் தோய்ந்து மிக்க ஆசாரத்துடன்தான் ஆலயத்திற்கு வருவார்கள். இன்று ஆலய நிர்வாகிகளும் பணியாளர்களும் நித்திய

அறியாமல் பிழை செய்தவரைப் பொறுத்துக்கொள்வதே வீரமாகும்.

மாமிச போசனிகளாக இருந்துகொண்டு கூசாமல் கோவிலுக்கு வந்து தெய்வத் திற்கு முன்னால் நிமிர்ந்து நிற்கிறார்கள். கடவுள் கண் இருந்தால் தானே அவர் களைப் பார்ப்பார். அவர் கண்கெட்ட கட வுள் அல்லவா?

சுத்தமான மந்திர ஒலிகளும் பண் ணோடு கூடிய நல்ல தமிழ்வேத ஒலிகளும் இன்று கேட்பதற்கு அரிதாக உள்ளன. உபதேசம் இல்லாமலும் சமஸ்கிருத மொழியறிவு இல்லாமலும் சரியான உச் சரிப்புத் தெரியாமலும் ஆசாரம் இல்லாத வர்களும் (தீட்டு, தொடக்குடன்) மந்திரங் களை ஆசையுடன் சொல்லிவருகின்றனர். இந்த ஒலிகள் நாளும் வானிற் கலந்து அதற்குரிய பலன்களை நமக்குத் தரு கின்றன.

கிரியைகளின் தத்துவார்த்த உண்மைகள் உணர்ந்து செய்பவர்களும் மந்திரங்களின் பலனும், பொருளும், நோக் கும் தெரிந்து ஓதுபவர்களும் ஆத்மார்த்த பூஜையை நிறைவுசெய்து ஆத்மார்த் தமாக மக்களை வழிநடத்திச் செல்பவர் களுமான அர்ச்சகர்களும் அரிதாகவே உள்ளனர்.

அர்ச்சகர்கள், ஆலய நிர்வாகி கள், அடியார்கள் ஆகிய முத்தரப் பினரிடையே காணப்படும் இணக்கப் பாடும் ஒருவர்மீது மற்றொருவர் கொள் ளும் நம்பிக்கையும் இவர்களோடு உண்மை விசுவாசத்துடன் இணைந்து செயற்படும் ஏனைய ஆலயப் பணியாளர் களின் செயற்பாடுந்தாம் ஆலயங்களில் ஆண்டவனைக் காண வழிவகுக்கும். இது சரியாக நடைபெறுகிறதா?

இந்த நிலையில் இத்தனை ஆலயங்களைக் கட்டிவைத்திருக்கிறோமே கடவுள் ஏன் கண்ணை மூடிக்கொண்டிருக் கிறார் என்று நாம் கேட்கலாமா?

**சந்நிதிமுருகன் அகவல்**

குககுக குககுக சண்முகனே!
குன்றம் நின்றொளிர் சண்முகனே!
குமர புரத் துறை சண்முகனே!
குறத்தி யணையும் சண்முகனே!
தக தக வேல் கொள் சண்முகனே!
தந்தருள் நின்னருள் சண்முகனே!
தண்ணளி மிக் கோய் சண்முகனே!
தமியேம் போற்றும் சண்முகனே!
மிக மிக வருள்தா சண்முகனே!
மின்னிடை யர்கோன் சண்முகனே!
மின்னுஞ் சோதிச் சண்முகனே!
மிடி மடி களையுஞ் சண்முகனே!
சுக சுக வாழ்வருள் சண்முகனே!
சுந்தரச் சந்நிதி சண்முகனே!
சூர்குலங் கொன்ற சண்முகனே!
சுனைமலி மேவும் சண்முகனே!

*"சமூக இரத்தினம்" M.K. இளையப்பு.*

நம்முடைய உள்ளத்தைத் திறந்துகாட்டுவது சிரிப்புத்தவிர வேறு ஏதுமில்லை.

ஞானச்சுடர் (தொடர்ச்சி...

உ

# அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழும் கிருபானந்த வாரியார் விரிவுரையும்

## முருகன் திருஅவதாரம்

S.S. ரஜீந்திரன் அவர்கள்

தக்கனுக்குக் கொடுத்த வரத்தை நிறைவேற்ற எண்ணிய சிவனார் உமைய வளைத் தக்கனுக்கு மகளாகப் பிறந்து தவம் செய்து தம்மை அடையுமாறு திரு வாய் மலர்ந்தருளினார். அவ்வாறே தக்க னின் மகளாகப் பிறந்த உமையவள் தாட் சாயணி என்னும் பெயரோடு பூவுலகில் சிவனை நோக்கித் தவம் செய்தாள். சிவனார் உமையவளின் தவத்திற்கு மகிழ்ந்து வேதியர் வேடம் கொண்டு உமையவள் தவச்சாலையை அடைந்து ஆட்கொண்டு தக்கனுக்குத் தெரியாமல் கைலைக்குச் சென்றார். கோபமுற்ற தக்கன் சிவநிந்தனை செய்து அவரை வழிபட்டோரையும் துன்புறுத்தினான். சிவனை விடுத்துப் பெரும் யாகம் ஒன்றைத் தொடக்கினான். அதில் ததீசி, அகத்தியர், சனகர், அத்திரி, வசிட்டர், பிருகு, துருவாசகர், பராசரர் போன்ற முனிவர்கள் தவிர்ந்த ஏனைய முனிவர் களும் தேவர்களும் திருமாலும் நான்முக னும் கலந்து கொண்டார்கள். அவ்வேள் வியை அகோர வீரபத்திரர்களும் காளி களும் அழித்துத் தக்கனையும் சிரச்சேதம் செய்தார்கள். சிவபெருமானுக்கு நான்கு சக்திகள். போர்ச்சக்தி- துர்க்கை, கோபச்சக்தி- காளி, அருட்சக்தி- கௌரி, ஆண்சக்தி- திருமால்.

வீரமகேந்திரபுரத்தின் அரசனும் எல்லா உலகங்களையும் ஆள்பவனும் சிவனாரிடம் பெரும் வரங்களைப் பெற்ற வனும் அசுரகுலச் சக்கரவர்த்தியுமான சூரபன்மன் தேவர்களைச் சிறையில் இட்டு வதைத்தான். தேவர்கள் தக்கனின் யாகத்திற் கலந்து கொண்டதனாலேயே இவ்வாறான துன்பத்தை அடையவேண்டி இருந்தது. தெளிவுற்ற தேவர்கள் சிவனைத் தஞ்சமடைந்து தமது துயர்தீர அரனை வேண்டினார்கள். இமயமலை அரசனாகிய இமவானின் (பர்வதராஜன்) மகளாகிய பார்வதியைத் திருமணம் கொண்ட சிவபெருமான் தேவர்களின் துயர்தீர்க்கத் தன் நெற்றிக்கண்ணில் இருந்து முருகனைத் தோற்றுவித்தார்.

சரவணப்பொய்கையில் தோன்றிய முருகப்பெருமான் கார்த்திகைப் பெண் களின் கைகளிலே தவழ்ந்து உமையின் கைகளினால் அணைக்கப்பெற்றுக் கந்த னானான். நாரதமுனிவரின் வேள்வியில் தோன்றிய ஆட்டுக்கடாவை அடக்கித் தனது வாகனமாக்கிக் கொண்டார். சிவ னைத் தரிசிக்க வந்த பிரமன் முருகனைக் கண்டும் காணாதுமாகச் சென்றதால் அவரை அழைத்துப் பிரணவத்தின் பொருள் கேட்டு, அதன் பொருள் தெரியா திருந்த பிரமனின் தலையில் குட்டி, அவனைச் சிறையில் அடைத்துப் பின் தந்தையின் வேண்டுகோளுக்கு அமைய அவரை விடுவித்துத் திருவிளையாடல் புரிந்தார். பின் சிவனாருக்குப் பிரணவ

மந்திரத்தின் பொருள் உரைக்கும் குரு வாக இருந்து திருவிளையாடல் செய்தார். அதேபோன்று அகத்திய முனிவருக்கும் பிரணவ மந்திரப் பொருளையும் வேதா கமங்களின் மெய்ப்பொருளையும் யாம் உய்யும் பொருட்டு உபதேசித்தருளினார். தேவர்களின் துயரை நீக்குமாறும் சூரபன் மனை அழிக்குமாறும் சிவனார் முருக னிடம் ஆஞ்ஞை இட்டார். முருகப்பெரு மான் வீரபாகு தேவர் இலக்கத்தொன்பது வீரர்கள், பூதபடைகள், திருமால், பிரமன், இந்திரன் ஆகியோர் புடைசூழச் சூரபன்ம வதத்திற்குப் புறப்பட்டார்.

உமையவள் உலகத்தை இயக் கும்சக்தி தான் என்று கர்வமுற்றதும் அத னால் சிவனார் தனித்துநின்று உலகத்தை இயங்காமற் செய்ததும் சிவராத்திரி என் னும் ஒரு சிறந்த தினம் உருவாகியதும் சிவனை நிந்தித்துத் தக்கன் செய்த யாகத்தில் தேவர்கள் கலந்து கொண்ட தும் அதனால் சூரபன்மனிடம் தேவர்கள் வதைபட்டதும் அச்சூரபன்மனை அழிப் பதற்காகச் சிவனார் முருகனைத் தோற்று வித்ததும் தக்கன் சிவனாரிடம் கேட்ட பெரும் வரத்தினாலேயே நிகழ்ந்தவை. ஆகவே முருகன் என்னும் தனிப்பெரும் தெய்வம் உதிப்பதற்குக் காரணமானவன் தக்கன்.

ஆனாலும் சிவனை இம்சித்த தக்கன் மனந்திருந்தி ஆயிரம் ஆண்டுகள் சிவனை நோக்கித் தவம் புரிந்து கணங் களுக்குத் தலைமைப் பதவியைப் பெற் றான். இவ்வாறான ஒப்பற்ற தெய்வத்தின் குரு ஆகியும், குழந்தையாகியும் தோன்றிக் கதிர்காமத்தலத்தில் குடி கொண்ட கந்தனை இப்பாடலிற் பின்வரு மாறு வேண்டுகிறார் அருணகிரிப்பெரு மானார்.

"கதிர்காமக் கந்தனே! புயவீரரே! சரஸ்வதி போற்றும் வள்ளலே! சைவ சமயக் காவலரே! ஒப்பற்ற அன்புடன் நின் திருவடியைத் தியானிக்க அருள் புரிவாயே!"

## பாடல்

எதிரி லாத பக்தி — தனைமேவி
இனிய தாணினைப்பை — இருபோதும்
இதய வாரிதிக்குள் — உறவாகி
எனதுளே சிறக்க — அருள்வாயே
கதிர காமவெற்பி — லுறைவோனே
கனக மேருவொத்த — புயவீரா
மதுரவாணியுற்ற — கழலோனே
வழுதி கூனிமிர்த்த — பெருமாளே

## பொருளுரை

**எதிரி லாத பக்தி — தனைமேவி**
**இனிய தாள்நினைப்பை — இருபோதும்**

நிகர் இல்லாத அன்பைச் செலுத்தி நின் இனிய திருப்பாதங்களில் தியானத்தை இரவும் பகலும்

இதய வாரிதிக்குள் உறவுஆகி
எனதுஉளே சிறக்க அருள்வாயே

மனம் எனும் கடலிற் பதியவைத்து அடியேனுடைய உள்ளத்திலே சிறப்புப் பெற அருள்வாயே

கதிர காமவெற்பில் உறைவோனே
கனக மேருவொத்த புய வீரா

கதிர்காமர் என்ற திருமலையில் எழுந்தருளியுள்ளவரே, பொன்மேரு கிரியை ஒத்த திருப்புயங்களை உடைய வீரரே

மதுரவாணிஉற்ற கழலோனே
வழுதி கூன்நிமிர்த்த பெருமாளே

தேன்மொழியாள் சரஸ்வதி போற்றும் திருவடியுடையவரே! பாண்டிய மன்னனின் கூனைத் திருஞான சம்பந்தர் மூலம் நிமிர்த்திச் சைவசமயத்தைக் காத்தருளிய பெருமையின் மிக்கவரே!

(தொடரும்...

## "நின்னறத்தை நிறுத்தாதே"

கஷ்டங்கள் பட்டாலும் கடன்தொல்லை யானாலும்
கடவுளை நீ மறக்காதே,
காலங்க ளானாலும் கடமைகள் இருந்தாலும்
கல்வியை நீ மறக்காதே,
இஷ்டங்கள் போலவே எங்குநீ சென்றாலும்
இல்லறத்தை மறக்காதே,
எண்ணியது எளிதாக இனிதாகப் பலித்தாலும்
எம்மொழியை மறக்காதே,
நஷ்டங்கள் வந்தாலும் நின்மனம் தளர்ந்தாலும்
நம்பிக்கையை மறக்காதே,
நாளையே உன்னிடம் கோடியே குவிந்தாலும்
நின்னறத்தை நிறுத்தாதே
நிஷ்டையில் உன்வீட்டில் சந்நிதியை ஒருகணம்
நினைந்திரு பயம் நெருங்காது
நேரமுனக் குண்டெனில் வாரத்தில் ஒருதடவை
நேராகச் சந்நிதிக்குப் போ!

*கே. எஸ். சிவஞானராஜா அவர்கள்.*

உ

# கல்விநிலையங்களிற் கற்பகநெறியான சைவம்

திரு முருகவே பரமநாதன் அவர்கள்

ஈழமணித்திருநாட்டில் அவரவர் அனுட்டிக்கும் சமயபாடம் கட்டாயப் படுத்தப்பட்டது. அஃது சைவத்தினின்றும் வேறுபட்ட இந்துநாகரிகமாய்ப் பரிணமித்துவிட்டது. அப் படிப்பு வாழ்வோடு பின்னாமல் தொழிலோடு தொடர்புறு பாடம் ஆயது. இந்நிலை நம் தாய்ச் சமயமாம் சைவத்துக்குப் பெரிதும் பாதிப்பை பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. கண்ணதாசன் பாடியதுபோலப் பீடிப் புகைக்கும் சாம்பிராணிப் புகைக்கும் பேதம் தெரியாததுபோலவே, சைவம் எது இந்து எது எனத் திகைக்கின்றனர். நம் சமயம் வைதிக சைவம். தானங்களிற் சிறந்தது வித்யாதானம். வித்தை -- கல்வி, கற்றற்குரிய நூல்களைக் கற்றலே கல்வி. நெஞ்சத்தால் நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமையால் கல்வியழகேயழகு என்கிறது நாலடியார். கல்வி கரையில, கற்பவைநாள் சில. பிட்சை புக்காயினும் கற்றல் மேலானது. ஆதியிலே திண்ணைப் பள்ளிக் கூடங்கள்தான் கல்வி நிலையங்கள். பிற்காலத்தே போர்த்துக்கேய ஒல்லாந்த, ஆங்கிலேயர் படையெடுப்பால் ஒரு எறியிலே இரு மாங்காயென்ற உத்தியைப் பாவித்து நாட்டைக் கைப்பற்றிப் பொருள் தேடுவதோடு, சமயத்தையும் பரப்பினர். சைவசமயிகளைக் கிறித்தவர் ஆக்கினர். மிசனரிமாரின் இம்மதப்பரப்பால் சைவ சமயம் பொலிவிழந்துபோனது. இதுவும் ஈழத்தமிழர் வரலாற்றில் கறைபடிந்த ஓர் அத்தியாயமாகும். இவ்வூடுருவலை அண்மையில் வெளியான "இலங்கைத் தமிழ்த் தேசியவாதம் - அதன் ஆரம்பத் தோற்றம் பற்றியதோர் ஆய்வு என்ற நூலிலே- புள்ளிவிபரங்களுடன் காணலாம். இப்பரசமய நுழைவு இன்று நேற்றல்ல மேற்கைரோப்பிய நாட்டவரின் ஊடுருவலால் ஏற்பட்டதாம். சைவ ஆலயங்கள் இடிக்கப்பட்டு, கிறிஸ்தவ தேவாலயங்களும், கோட்டைகளும் நிறுவப்பட்டன. இன்றோ சைவ ஆலயங்களிலே அவர்களின் புத்தாண்டு, நத்தார் கொண்டாடப்படும் அளவுக்கு படம் வைத்து வணங்கும் அளவுக்கு நிலைமை மாறிவிட்டது வெளிநாடுகளில். காரணம் ஆன்மீகம் வாணிபமயப்படுத்தப்பட்டு விட்டமையே காரணம். மேலைநாட்டவரின் செயல்கண்டு பொங்கி எழுந்தவர்தான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள். அவர் வெளியிட்ட யாழ்ப்பாணச் சமயநிலை என்ற பிரசுரமும் கிறித்தவர் வெளியிட்ட சைவதூஷணங்களுக்கு எழுதிய பதிற் கண்டனங்களும் நம் சமய ஆவணங்களாம். நாவலரது புரட்சியும், மறுமலர்ச்சியும், அயரா உழைப்பும், ஆவேசமும், அர்ப்பணிப்பும் இன்றைய சைவநிலைப் பாட்டின் அடித்தளமாம் முதற்கட்டப் பணியாக யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலும், தமிழ்நாட்டுச் சிதம்பரத்திலும் சைவப் பாடசாலைகளை அமைத்து, மக்களை, மாணவர்களை சைவசமயிகளாக்கினார்.

அன்னாரின் அடிச்சுவட்டிலே அருணாசல உபாத்தியாயர், இராச

கன்னிமாடப் பெண்களுக்கு அணியாவது, ஒழுக்கமே தவிர உடையன்று.

ரத்தினம், துரையப்பா, குமாரசுவாமிக் குருக்கள் போன்றபலர் சைவப்பாடசாலைகளை நிறுவினர். கிராமந்தோறும் சைவப் பாடசாலைகள் எழுந்தன. சைவபரிபாலன சபை, சைவ வித்தியாவிருத்திச் சங்கம், விவேகானந்தசபை, இராமகிருஷ்ண மிஷன், இந்துப்போட் போன்ற அமைப்புக்கள் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு, வடகிழக்கில் மட்டுமன்றிப் பிற மாகாணங்களிலும் சைவப்பாடசாலைகளை நிறுவின. தனியார் முயற்சி, தாபனக்கூட்டு அமைப்பு என்பனவற்றின் பயனாகப் பல சைவத் தமிழ்ப் பாடசாலைகள், ஆங்கிலமொழி மூலக் கல்லூரிகள் எழுந்தன. இத்தீவிர முயற்சி வேற்றுமதப் பாடசாலைகளை வீழ்ச்சியடையச் செய்தன. சைவம் தலையெடுத்தது. சமயபாடம், சைவப்பண்பாடு, பழக்கவழக்கம், நடை, உடை, பாவனை எல்லாமே சைவமயமானது. நாவலர் எழுதி வெளியிட்ட சைவவினாவிடை, பாலபாடம் போன்ற நூல்களை மாணவர் படித்தனர். பெற்றோரும் ஆசிரியர்களும் சைவம் தழைக்கவும், சைவசமயிகள் உய்திபெறவும் அயராது பாடுபட்டனர். மீளவும் சைவசமயம் கட்டியெழுப்பப் பட்டது. இதன் கால்கோள் நாவலரே.

கொழும்பு விவேகானந்தசபை சமயப்பாடப் பரீட்சைகளை, அகில இலங்கை ரீதியாக நடாத்திப் பரிசில்கள் வழங்கிச் சைவ இளஞ்சமூகத்தை உற்சாகப்படுத்தியது. ஆசிரியர்களும் ஒத்துழைப்பு நல்கினர். அஃதோடு நின்றுவிடாது ஆசிரியர்கள் மாணவர்களின் தரத்துக்கமையச் சைவசமய சம்பந்தமான தரமான நூல்களை வெளியிட்டனர். சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார், குமாரசுவாமிக் குருக்கள், ஈழகேசரிப் பொன்னையா போன்றவர்களும் சிறந்த சமயநூல்களை வெளியிட்டனர். திருநெல்வேலியிலே இருபதுகளில் சைவாசிரிய கலாசாலை அமைக்கப்பட்டது. இவ்வேதுவினால் பன்னூற்றுக்கணக்கான சைவாசிரியர்கள் வெளியாகினர். வேதப்பாடசாலை செல்வோர்க்கு கிறித்தவம் போதிக்கப்பட்டது. இதனாலே சைவ மாணவர் தொகை சைவப்பாடசாலைகளிலே அதிகரித்தது. ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நிறுவப்பட்டமையால் பண்டிதர்கள், சைவப்புலவர்கள் உருவாகினர். பிற்பகுதியில் சைவபரிபாலன சபையும் சமயப் பாடப்பரீட்சையை மேற்கொண்டது நல்ல பயனளித்தது. பின்னர், துரைத்தனம் சமயபாடத்தைக் கட்டாயப் படுத்தியது. மாணவர்கள் விரும்பியோ விரும்பாமலோ உயர்தர (A/L) வகுப்பு வரை சமயம் கற்றனர். பாடநூல்களையும் அரசாங்கம் வெளியிட்டது. சமகால கட்டத்தில் சைவசமயத்துக்குப் புறம்பான பல சமய வணக்கநிலைகள் அந்நூல்களிலே புகுத்தப்பட்டிருக்கின்றன. இதை உண்ணிப்பாய்க் கவனித்துப் பொறுப்புள்ளவர்கள் சுட்டிக்காட்டுவது இன்றியமையாததாம்.

(வித்தியாசாலை- கல்லூரிகளில்) சமயக்கல்வி போதிப்பதுடன், அங்கே சமய சம்பந்தமான கொண்டாட்டங்கள் மேற்கோள்வதன்மூலம் சமய உணர்வுகளையும், கடமை சேவையுணர்வுகளையும் அறிமுகம் செய்வதாகவும் அமையும். சந்தான குரவர், சமயகுரவர், நாவலர், குருபூசைகளைக் கிரமமாய் மேற்கொள்ளல், சமயப் பெரியார்களை அழைத்துச் சொற்பொழிவாற்றுவித்தல் நல்ல பயன் தருவனவாம். சரஸ்வதி பூசை, பாடசாலை மட்டத்தையும் கடந்து படிப்பகம், தனியார் கல்வி நிலையங்கள், வீடு,

கண்மூடித்தனம் வேகமான வீழ்ச்சியில்வந்து முடியும்.

ஆலயம் என்பவற்றிலும் கொண்டாடப்பட்டது. இந்நிலைப்பாடு கால தேசவர்த்தமானத்தால் நிலை தளர்ந்தபோதும் சுருக்கமாக மேற்கொண்டனர். இந்நடைமுறைகள் இளம்பராயத்தினரைச் சமய நாட்டம் உள்ளவர்களாக்கும். பாதணிகள் போட்டுக்கொண்டு திருமுறையோதல் சைவநெறிக்கமையாத செயலாகும். மேலாடையோடு கோயில் போவதும், காற்சட்டையோடு போவதும் சைவ பாரம்பரியத்தை அழிப்பதாகும். சில கல்லூரிகளில் ஆலயங்கள் கட்டப்படுகின்றன வரவேற்கத்தக்கது. பாடசாலை துவங்கும் போதும் விடும்போதும் ஆனைமுகன் ஆறுமுகன் என்ற பிரார்த்தனை முறையைக் கைநெகிழவிடக்கூடாது.

சமகாலநோக்கில் கிறித்தவமதம், வடகீழ்மாகாணங்களிலே (சிறப்பாய் வன்னிப்பகுதியில்) தீவிர மதமாற்றம் செய்வதைக் காணலாம். வெளிநாடுகளிலும் முடுக்கி விடப்பட்டிருக்கிறது. பல மேல்நாட்டு மக்கள் மதம் மாறிவிட்டனர். மேனாடுகளாகிய ஐரோப்பாவில், அமெரிக்காவிற் பயில்வோர் வாழும் சமூகம் கிறித்தவமே. அதனால் அவர்கள் திசை மாற்றப்படுகின்றனர். ஆலயங்களைத் திறந்து பயனில்லை. அவை சைவசமயம் நிலையங்களாய் மாறவேண்டும். சிறப்பாக இன்றைய உள்நாட்டு, வெளிநாட்டுச் சூழ்நிலைகள் சைவசமயத்தைப் பெரிதும் பாதிக்கத்தான் செய்கின்றன. சைவசமயத்தையும், சைவாலயங்களையும், சைவப் பாடசாலைகளையும், இந்து ஆலயம், இந்துப்பாடசாலை, இந்து சமயம் என ஒருசாரர் வலிந்தழைக்க முயன்று வருகின்றனர். இந்த நிலைக்குச் சமூகத்தைத் திசை திருப்புவோர் இரண்டும் கெட்ட நிலையில் உள்ளவர்களே. ஏன் பாடசாலையிலே எம் சமயம் சைவம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இந்தச் சைவ அழிப்பு வேலைக்கு நாம் இடமளிக்கக்கூடாது. சமார்த்தர்கள் நாவலர் காலத்திலிருந்தே இம்முயற்சிகளிலே ஈடுபட்டுவருகின்றனர். அண்மைக் காலங்களிலே இந்திய நாட்டில் இருந்து ஈழத்திலும், புலம்பெயர் தேயங்களிலும் புகும் புதிய வரத்துக்கள் கிறித்தவத்திலும் கூரியவாள்களேயாம். பிறநாட்டு ஆலயங்களிற்கூட அவற்றின் ஆதிக்கம் மேலோங்கக்காணலாம். இதனாற் சைவம் வலிகுன்றும், நம் எதிர்காலச்சந்ததிக்கு அவர்களின் உண்மையான சமயம் எது என்று தெரியாமற் போய்விடும். பெற்றோர், முதியோர்கூடத் தம் சமயம் தெரியாமற் தடுமாறுகின்றனர். உதாரணம் சைவ ஆலயங்களிலே (வெளியே) ஜனவரி முதல் திகதி புதுவருடம் என்று கொண்டாடப்பட்டு, களியாட்ட விழாவும் மேற்கொள்வர். வீட்டிலே பொங்குவதும், கைவிஷேசம் கொடுப்பதும் இன்றைய நுழைவாகும். இன்றைய சிறார்கள் ஜனவரி முதல்திகதியையே தம் புத்தாண்டு என நினைப்பர். எமது சித்திரை முதல்திகதிதான் சைவர்களின் புத்தாண்டு என்ற உண்மை திரைபோட்டு மறைக்கப்படுகிறது. இதற்கு இடங்கொடுக்கக் கூடாது. புத்தாண்டு வாழ்த்துக்கு இத்திகதி பொருத்தமா? சைவர்களே சிந்தியுங்கள்.

கிறித்தவத்தை போற்றுவார் கருணை வடிவான புத்தரைப் போற்றாத தேன். இஸ்லாமை மதிக்காததேன். சமரசம் பேசுவது, கிறித்தவம் போற்றுவது இது இன்றைய பரமத மேலாதிக்கமாம்.

சிங்கள பௌத்த புத்தாண்டு இணைந்தே வரும். இயேசுமதப் புத்தாண்டு ஜனவரி முதல். இதற்கு முன்னுரிமை கொடுப்போர் சைவர்களே. இஃதேபோல நத்தார் வாழ்த்துக்கூறும் சைவசமயிகளும் இல்லாமல் இல்லை. எந்தக் கிறித்தவரும் எமது பெருநாட்கட்கு (தை, சித்திரை) வாழ்த்துக் கூறியதுண்டா? இச்செயற்பாட்டால் அடுத்த தமிழ்ச் சந்ததியினர் எல்லாவற்றையுமே மறந்து விடுவர். இவையெல்லாம் சைவத்தின் மேற்பேராதிக்கம் செலுத்த ஆலயங்கள் இடமளிப்பதால் ஏற்படும் பேராபத்து எனவே எம் சமய ஸ்தாபனங்களும், ஆலயங்களும், பாடசாலைகளும், ஆசிரியர்களும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டுமென்ற உண்மையை உணர்வார்களாக.

**பயனான பணியில் அகவை பத்தாவது படி**

தானமே தவத்தின் மிக்க மோனமே மொம்பூசண நாதனே
பானமே பரஞ்சுடர்க்காதியான ஞானமே நற்கதிவேதியராய
பொற்பதி புங்கவர் கதிர்காமர்க்கருள் கூர்ந்த பெம்மானே
போத மாய்ப்பொங்கியுயர்பத்தாண்டடி மல்கும் வேணியனே வாழி!

அன்னத்தையூட்டி ஆராதனைகாட்டி அகத்தினைத் திறந்து மைகும்
அன்பினால் மதியைக்கூட்டி ஆன்மீக வாழ்வையீர்க்கும்
இன்பமயமான சோதிக்கீடு எங்குமே கிடைப்பதில்லை
பண்பிலார் பாசம் நீத்து பரமஞானங்கூட்டும் நீதியாம் கலைச்சுடரே வாழி!

பேரன்பு கொண்டபல்லோர் பேரவையைத் தொண்டுகூட்டி யார்த்து
பெருமை கொள்தவத்தின் மிக்க தானத்தின் சிறப்பைப் பேணிச்செப்பி
பெற்றிதான் மாவிடத்தின் பேறுஎன்றுகாட்டியுலகோர் போற்ற அன்னத்தை
ஆக்கல் செய்தார்
பற்றிலா வாழ்வைநீத்த அறிவொளி ஞானபானு மயில்வாகனசீலனே வாழி!
வாழி!!

ஒப்பிலாவுயர்வுகொண்டு ஓரங்கம் காட்டாதிலங்கும் பணிப்பில் ஞான்றும்
ஓங்குபுகழ் ஞானச்சித்தர்கள் பேணப்பட்ட மோகனதாஸ்ருபங்கொண்டு
வித்தக ஞானக்கந்தனாளும் வீழ்வினை விழாதோராகி
வந்தகக்கலை மாமலைப்பணியே பாவலர் பாடிடும் கலைமதிச்சுடரே வாழி!

வெற்றிவேற்கரசே வேதாந்த நித்தியப் பொருள்பேசிடும் சந்நிதியான் பணிப்பே
வேழ்மிகு சேவையே வெந்துயர்பசிப்பிணிதுய்த்திடும் ஞாலமே சுடரே
பாரெலாம் போற்றியிசைபரவச்சூல்கொள் மேகமாச்செழித்திட்டனை சந்நிதியில்
பால் மிகுகவை தொண்டையாற்றிடைக்கோ ணாகவந்த ஞானச்சுடர் ஒளியே
நீ என்றும் வாழிய! வாழியவே!!

*கலைமணி க. தெய்வேந்திரம் A.I.J.P அவர்கள்.*

நல்ல நம்பிக்கை நல்வழி காட்டும் சந்தேகம் சங்கடம் தரும்.

# அருட்கவி சீ. விநாசித்தம்பிப்புலவர்......

செல்வி தி. வரதவாணி அவர்கள்

பூவுலக வைகுந்தமான திருமலையினைக் காணச்சென்ற இராமானுஜர் மலையடிவாரத்தை அடைந்ததுமே ஆனந்தக்கண்ணீர் மல்கி எம்பெருமான் நாராயணரும் திருமகளும் நித்தியவாசம் செய்யும் வைகுந்தத்தின் எல்லா இலட்சணங்களும் திரண்டமலையாம் திருமலையானைப், 'பாவ உடலையுடைய நான் மிதித்து அசுத்தப்படுத்த மாட்டேன். இங்கிருந்தே திருமலையைப் பார்த்துப் பார்த்து என் உடலையும் மனத்தையும் தூய்மையுறச்செய்து, பேறுபெறுவேன்' என எண்ணி அடிவாரத்திலேயே தங்கி விட்டாராம்.

இதனை அறிந்த திருமலைச் சாதுக்களும் முனிவர்களும் ஓடோடிவந்து பணிவன்புடன் ''புனித மகாத்மாவே! உங்களைப்போன்ற தூய ஆத்மாக்கள் மலை ஏறாது விட்டால் சமாணிய மக்கள், நாங்கள் எல்லாம் எம்மாத்திரம்". "பிரபுவே உங்களைப் போன்ற பக்தர்கள், தாங்களே மிகவும் தூயவர்களாகையால், தங்கள் உள்ளத்தில் உறைந்துள்ள திருமாலுடன் சேர்ந்து புண்ணிய தீர்த்தங்களை மேலும் புனிதமாக்குகிறார்கள்" எனக் கூறியமையை எடுத்துவிளக்கி ''தங்களைப் போன்ற மகான்கள் வலம் செய்வதனால் தான் யாத்திரைத் தலங்கள் தூய்மை பெறுகின்றன என்று கூறி ஆலயம் புகும் படி வேண்டிக்கொண்டனராம். இக்கருத்தை ஏற்றுக்கொண்டு இராமனுஜரும் எம்பெருமானைத் தரிசிக்கச் சென்றாராம்.

இச்சம்பவத்தின்மூலம் எமக்கு, இறைவன் வாழும் மகாத்மாக்கள் விஜயமானது எல்லாவற்றையும் தூய்மைப் படுத்துகின்ற சக்திவாய்ந்தது எனும் கருத்தைப் புலப்படுத்துகின்றது. இக்கருத்தைப் புலப்படுத்தும் வகையில் அருட்கவிஐயாவினது வாழ்வியல் சம்பவங்கள் பல அமைந்துள்ளமை அனைவரும் அறிந்ததே. அந்தவகையில் ஐயா அவர்களது அற்புதம் நிறைந்த வரலாற்றில் ஒன்றை நாம் இப்பொழுது பார்ப்போம்.

தொட்டிலடி - மாகியப்பிட்டி பிரதான வீதியில் தெருவோரமாக ஒரு அரசமரம். அங்கு வழிப்போக்கர், அயலில் வாழும் மக்கள் இளைப்பாறிச் செல்வர். ஒரு சமயம் இளைப்பாறவந்த வழிப்போக்கர் ஒருவருக்கு மரவேர் அடியில் கிடந்த கல் ஒன்று விநாயகர் திருவுருப்போல காட்சியளிக்கவே, அன்றுமுதல் அக் கல்லை விநாயகராகக் கொண்டு அரசடி விநாயகர் எனப்பலரும் கர்ப்பூரம் ஏற்றி, தேங்காய் உடைத்து, பொங்கல் செய்து, பூசகர் இன்றி வழிபட்டனர்.

இவ்வாறு அரசமரத்தடியில் விநாயகர் வழிபாடு இடம்பெற்றாலும் அங்கு விநாயகர் திருவுருவ வழிபாடு இருக்கவில்லை. இதைநோக்கிய அடியார் ஒருவர் கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்கு முன்னர் கருங்கல்லால் ஒரு விக்கிரகம் செய்யப்பிரியப்பட்டார். பிரதிஷ்டை செய்யவும் ஏற்பாடாயிற்று. ஆனால், அவர் அதற்குள் இயற்கை எய்திவிட்டார். பின்னர் ஒருவாறு அவ்வூர் அடியார் சிலர் ஒன்றுகூடி அவ் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்தனர். இதன் பின்னர் இவ்வாலயத்தில் சிலகாலம் மாற்றம் எதுவுமே நிகழவில்லை.

அறியக்கூடிய யாவற்றையும் அறியாமல் இருப்பதன் பெயர்தான் மனநோய்.

இவ்வாறு இருக்கையில் அருட்கவி ஐயாவின் பக்தன் திரு கந்தசாமி அவர்களும் இவ்விநாயகரிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர். 1993ம் வருடம் ஒருமுறை அவ்வன்பர் அருட்கவி ஐயாவிடம் ஆசீர்வாதம் பெறவந்த சமயம் இவ்விநாயகர் பற்றி ஓரிரு வார்த்தைகள் கதைத்திருக்கிறார். சில நாட்களின் பின்னர் விநாசித்தம்பி ஐயா அவ்வழியாற் சென்றசமயம் அரசடி விநாயகர் ஆலயம் சென்று அங்கு வந்த அடியார் (கந்தசாமி இரதிதேவி) இடம் "வெகுவிரைவில் இவ்விடத்தில் பெரிய ஆலயம் ஒன்று கட்டப்பட்டு அடியார்களின் அருட்பிரவாகத்துக்கு விடப்படும்" எனக் கூறினாராம்.

சில நாட்களில் முதன்முதலாகப் பரிபாலனசபை ஒன்று உருவாக்கப்பட்டு ஆலயம் கட்டப் பணம் சேகரிக்கப்பட்டு வந்தது. அதற்குள் இடப்பெயர்வு. பின் மீள்குடியமர வந்தபொழுது ஆசனக் கல்லோடு விநாயகர் வேர்மீது சாய்ந்த நிலையில் காணப்பட்டார். இதனால் ஆலயம் கட்டும் முயற்சி சீக்கிரமாகவே இடம் பெற்றது. இச்சமயம் அடியார் ஒருவர் எழுந்தருளி விநாயகர் ஐம்பொன் விக்கிரகம் ஒன்றை அன்பளிப்புச் செய்தாராம். 22.10.1997இல் மகா கும்பாபிஷேகமும் மிகவும் சிறப்புற நடைபெற்றது. நித்திய பூசைக்கு அந்தணர் ஒருவரும் நியமிக்கப்பட்டு ஆலயம் வெகுவளர்ச்சிகண்டு அருள் வீசியது.

இவ்வாறிருக்கையில் 15.12.2003 அன்று இரவு எழுந்தருளி விநாயகர் ஐம்பொன் விக்கிரகத்தைத் திருடர்கள் கையாடிவிட்டனர். அவ்வூர் மக்கள் யாவரும் சித்தம் கலங்கிச் செய்வதறியாது தவித்தனர். அச்சமயம் அருட்கவி விநாசித்தம்பி ஐயாவிடம் திரு கந்தசாமி அவர்களும் பாரியாரும் ஆலயப்பரிபாலனசபைத் தலைவி ஜெயந்தி என்பவரும் விரைந்து வந்து நடந்த விடயத்தைக்கூறி முறையிட்டனர்.

ஒருகணம் தியான நிலைக்குச் சென்ற ஐயா வெகுவிரைவில் விக்கிரகம் வெளிப்படும். நான் தரும் பாடலைத் தொடர்ந்து 21 நாட்கள் பாடி வாருங்கள் எல்லாம் நல்லபடியே நடக்கும் என்றாராம்.

"பொருள் பூத்த பிரணவத்தின் ரூபா போற்றி
பொருப்பினிலே மறைவரைந்த புனிதா போற்றி
இருள் பூத்த கஜாசுரனை வதைத்தாய் போற்றி
ஏத்துமடியார் துயரம் தீர்ப்பாய் போற்றி
தெருள் பூத்த திருமறைகள் தந்தாய் போற்றி
சிந்தித்த வரங்கொடுக்கும் செல்வா போற்றி
அருள் பூத்த சண்டிலிப்பாய் அரசநிழல்
ஆதி சித்தி விநாயகனே போற்றி போற்றி"

எனத்தொடங்கிப் பதினொரு பாடல்கள் அமைந்த ஓர் தோத்திரத் திரட்டை உடனே எழுதிக் கொடுத்தாராம். "அகத்தியனார் குட்டுவதற்கு அகப்படாது நின்ற அரும்பொருளே" என்னும் பாடல் வரியூடாகப் பெருமுனி அகத்தியர் குட்டுவதற்குக் கைக்குள் அடங்காத அரிய பொருளே என விளிப்பதன்மூலம் கள்வரின் கைக்குள் அடங்கிய நீர் அடங்கா நிலையெய்த வேண்டும் என்னும் தொனிப்

நல்ல ஒரு கலைக்கு உள்ளத்தைப் பண்படுத்தும் ஆற்றல் இருக்கிறது.

பொருளும் இதன்மூலம் விளக்கப் பெற்றது. இவ்வாறு இப்பாடலில் உள்ளீடாக இறைவனை வெளிப்படும்படி கேட்கும் பாங்கு அமைந்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

அருட்கவி ஐயாவின் அருள் வாக்குப்படி பாடல்பாடப்பட்டு வருகையில் 19.12.2003 வீரகேசரி, உதயன் பத்திரிகையில் ஓமந்தையில் ஓர் ஐம்பொன் விக்கிரகம் பிடிபடப்பட்டுள்ளது. என்னும் செய்தி வெளியாகியது. விநாயகர் அடியார்களுக்கு மிகுந்த சந்தோஷம். திருடர்கள் பிடிபட்டதுடன் விக்கிரகமும் கிடைக்கப்பெற்றமை ஓர் அற்புதச் சம்பவமே. பின்னர் மீளவும் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் இடம்பெற்று ஆலயம் அருட்பொலிவு பெற்றது.

அருட்கவி ஐயாவின் அப்பதினொரு பாடலும் "அரசடி சித்திவிநாயகர் ஆலய தோத்திரம்" என்ற பெயரில் அச்சுப்பெற்ற நூலாக அவ்வாலய பரிபாலனசபை வெளியிட்டுள்ளது. இன்று சதுர்த்தித் தினங்களிலும் அவ் எழுந்தருளி விக்கிரகம் திருவீதியுலாவரும் பொழுதும் அத்தோத்திரம் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றது.

இத்தகு சிறப்புமிக்க அற்புதங்கள் எம்மத்தியில் இடம்பெற்றுள்ளன. இறைவன் தம்மடியாருள் உண்மையான மகாத்மாக்களின்மூலம் தம் சக்தியையும் செயலையும் ஆற்றிவருகின்றார். இதன்மூலம் அருட்கவி ஐயாவின் விஜயத்தின்மூலம் தடைப்பட்டிருந்த ஆலயம் வளர்ச்சி கண்டமையும், ஐயா அவர்களின் பாடல் மூலம் களவாடப்பட்ட விக்கிரகம் கண்டு பிடிக்கப்பட்டமையும் அருட்கவி விநாசித்தம்பி ஐயாவினது அசாதாரண நிலையினையும், இறையருட் சக்தியையும் எமக்குத் தெட்டத்தெளிவாக வெளிக்காட்டி நிற்கின்றது. (தொடரும்...

(தொடர்ச்சி...

**2006ஆம் ஆண்டு உற்சவம் (23.08.2006) தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| க. ரஞ்சன் | இணுவில் கிழக்கு | | 3000. 00 |
| ந. விஜயகுமாரி | மல்லாகம் | | 1000. 00 |
| ச. ஜெயதாசன் செந்தாவளவு | இருபாலை | | 500. 00 |
| ஆ. விநாயகமூர்த்தி சாளம்பை | கரணவாய் மத்தி | | 1000. 00 |
| திருமதி சச்சிதானந்தம் | வல்வெட்டித்துறை | | 5000. 00 |
| ஆதவன் மில் | அச்சுவேலி | ½ மூடை அரிசி | 1000. 00 |
| திருமதி சம்பந்தமூர்த்திமூலம் லவன் | டிந்துசியா | | 8000. 00 |
| சுகந்தினி மூலம் பவா காந்தராசா | உடுப்பிட்டி (சுவீஸ்) | | 5000. 00 |
| தில்லையம்பலம் பாஸ்கரன் | அச்சுவேலி தெற்கு | 10K அரிசி | 1000. 00 |
| இராசராகுலன் | சுண்ணாகம் | | 5000. 00 |
| க.வ. ரவீந்திரராஜா மூலம் சு. சிவலிங்கம் | அவுஸ்திரேலியா | | 10000. 00 |
| V. S. பரஞ்சோதி சோதி ஸ்ரோர்ஸ் | கோண்டாவில் | | 500. 00 |
| த. கந்தசாமி கோண்டாவில் | இருபாலை வீதி | | 1000. 00 |
| A.V. முருகையா | அவுஸ்திரேலியா | | 44000. 00 |

(தொடரும்..

அடிமைபோல் உழை அரசனைப்போல் சாப்பிடு.

உ

# வீடு எங்கே?

திரு ஆ. மகேசுஅவர்கள்

உணவு, உடை, வீடு என்பன மனிதனுடைய அடிப்படைத் தேவைகளாகும். மழை, வெய்யில், காற்று, துஷ்ட விலங்குகள் என்பவற்றிலிருந்து நமக்குப் பாதுகாப்பளிப்பது வீடு. ஒவ்வொருவரும் தத்தமது இயல்புக்கு ஏற்றவாறு வீடுகளை அமைத்து வாழ்வர். ஏழைக்குடியானவனுங்கூட தனது வசதிக்கேற்ப சிறிய குடிசையாவது அமைத்து வாழ்க்கையை மேற்கொள்ளுகின்றான். வசதி படைத்தவர்கள் வானுயர்ந்த மாடமாளிகைகள் கட்டி வாழ்ந்து வருவதையும் நாம் பார்க்கின்றோம்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களால் ஆனதே இப்பிரபஞ்சம். இப்பிரபஞ்சத்தை ஆட்டிப் படைப்பவன் இறைவன் ஒருவனே. இவ்வாறு இந்த இயற்கையாகிய ஐம்பூதங்களுக்கு எதிராக அவற்றிற்கு மாறாக விஞ்ஞானம் செயற்படுவதாலேயே உலகில் பூகம்பம், சூறாவளி, வெள்ளப் பெருக்கு, சுனாமி போன்ற தீய அனர்த்தங்கள் பல இடங்களில் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

2004ம் ஆண்டு மார்கழி மாதம் ஏற்பட்ட சுனாமியினால் இலங்கையில் மாண்ட உயிர்கள் எத்தனை? தகர்ந்த வீடுகள் எத்தனை? ஷெல்பட்டுத் தகர்ந்த வீடுகள் எத்தனை? இருந்தும், மனித வாழ்வை மேற்கொள்ள ஓர் இல்லிடம் அவசியம் என்பதை யாரும் மறுதலிக்க முடியாது. ஆனால், சுனாமியினாலோ, பூகம்பத்தினாலோ, ஷெல்லினாலோ அழிக்க முடியாத வீடு ஒன்றுள்ளது. என்றும் நிலைத்து நிற்கக்கூடியதும், பேரின்பப் பெருவாழ்வு கிடைக்கக் கூடியதுமான வீட்டினை (மோட்சம்) அடைய சைவசமயிகளாகிய நாங்கள் முயலுதல் வேண்டும். இவ்வாறான வீட்டினை அடைவதென்பது சர்வசாதாரணமானதன்று. சைவசமயம் வீடுபேறடைதலை முதன்மைப்படுத்தியுள்ளது. சமய நூல்கள் இதனைத் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன. ஆயினும் சைவ மக்களாகிய நாங்கள் இதனைச் சிந்தனைக்கு எடுப்பதில்லை.

இன்று நாம் கணினியுகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். விஞ்ஞான வளர்ச்சியினால் உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கியுள்ளது. ஆயினும் மனிதன் தனது தேவைகளை அளவுக்கதிகமாகப் பெருக்கிக் கொள்வதிலே ஆலாய்ப்பறக்கின்றான். இதனால் இறைவனை உள்ளன்போடு வழிபட வேண்டும் என்ற உயரிய நோக்கத்திலிருந்து தூர விலகி நிற்கின்றான். பிறப்புண்டேல் இறப்புண்டு. இதிலிருந்து யாரும் விடுபடுவதில்லை. வாழ்க்கையின் இறுதி இலட்சியம் வீடுபேறு அடைதல் என்பதை எமது சமயநூல்கள் எடுத்துக்கூறிய போதிலும், நாங்கள் அதனை எமது சிந்தனைக்குள்ளாக்குவதில்லை.

"அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்பதும் "ஈசனோடாயினும் ஆசை அறுமின்" என்பதும் ஆசையின் தன்மையைச் சுட்டி நிற்கின்றன. பற்றில்லாதவனாகிய இறைவனிடத்துப் பக்தி செலுத்த வேண்டும்; ஆசைப்பிணிப்புக்களை விட்டொழிப்பதற்கென்றே அவ்விறைவனிடம்

பக்தியை இறுகப்பற்ற வேண்டும். இதனையே வள்ளுவர்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என அழகாகக் கூறியுள்ளார்.

"அரிது! அரிது! மானுடராதல் அரிது" நாம் இப்பொழுது எடுத்திருக்கும் இந்த மானுடப்பிறப்பிலே மெய்ப்பொருள் நூல்களைக் கற்க வேண்டும். அவ்வாறு கற்று மெய்ப்பொருளை உணர்ந்தவர்கள் மீண்டும் இங்கு பிறவாத வீட்டுலகைப் பெறுவர் என வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார்.

"கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்று ஈண்டு வாரா நெறி"

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த மண்ணிலே நீதி, நியாயம், நேர்மை, சத்தியம் காணப்படுகின்றனவா? ஒவ்வொருவரும் தமது ஆணவ முனைப்பினால் அநீதியான செயற்பாடுகளிலே ஈடுபடுவதை நாம் பார்க்கின்றோம்.

முன்னொருபோது ஒரு குருவிடம் சீடன் ஒருவன் உபதேசம் பெறுவதற்காகச் சென்றான். குருவிடம் வந்த சீடனை - அவனுடைய மன எண்ணங்களைத் தமது ஞானக் கண்ணினால் அறிந்துகொண்ட குரு, "நான் செத்தாப்பிறகு வா" எனக்கூறி அனுப்பிவிட்டார். உபதேசம் பெறச்சென்ற சீடனுக்கோ ஒன்றும் விளங்கவில்லை. உண்மையில் நான் என்கின்ற அகந்தை. சீடனிடம் காணப்பட்டதனாலேயே, குரு அவனுக்கு உபதேசம் செய்யாமல் அனுப்பி விட்டார்.

எம்மை இயல்பாகவே பீடித்துள்ள ஆணவமலம் இருளைக் காட்டிலும் கொடியது. இருள் தன்னுருவத்தையாவது காட்டும். பிற பொருட்களைக் காட்டாது. ஆனால், ஆணவமலமோ தன்னையும் காட்டாது, பிறபொருட்களையும் காட்டாது. எனவே இருளைக் காட்டிலும் ஆணவமலம் கொடிது என்பதை உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயனிலே குறிப்பிட்டுள்ளார்.

"ஒரு பொருளும் காட்டாது இருளுருவம் காட்டும்
இருபொருளும் காட்டாதிது"

எனவே ஆணவ முனைப்பினால் ஆசைக்குட்பட்டு அல்லலைத் தேடாது, உடம்பை "நான்" என்றும், தொடர்பு இல்லாத பொருளை "எனது" என்றும் கருதுகின்ற மயக்கத்திலிருந்து விடுபடுபவர் தேவர்க்கும் கிட்டாத உயர்ந்த வீட்டுலகை (மோட்சம்) அடைவர். இதனையே வள்ளுவர்

"யான் எனது என்றும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

என்று கூறிப்போந்தர். ஆகவே வள்ளுவர் கூறிய வாக்கிற்கு அமைய நாம் எல்லோரும் அந்த வீட்டினை அடைய முயற்சி செய்வோமாக. அவ்வாறாயின் அம்முயற்சியை மேற்கொள்ளச் சேக்கிழார் பெருமானால் அருளப்பட்ட பெரியபுராணம் என்ற பக்திச்சுவை ததும்பும் நூலுக்குள்ளே நாம் நுழைதலவேண்டும். சேக்கிழார் தமது நூலிலே 63 நாயன்மார்களுடைய வாழ்க்கைபற்றி அழகாகக்கூறியுள்ளார். அந்த நாயன்மார்களுள் ஒரு குறிப்பிட்ட தொகையினர், அடியார்களுடைய பாதபூசைசெய்து, அன்னப்பசி தீர்த்தே இறைவனுடைய திருவடி நிழலை அடைந்தார்கள் என்று பார்க்கின்றோம். இந்த நடைமுறையினை நாமும் பின்பற்றி கடைத்தேறுவோமாக.

உ

# முன்னோர் சொன்ன கதைகள்

திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்

பக்கத்து வீட்டில் ஒரு சிறுவன் இருக்கிறான். துருதுருவென ஏதாவது குறும்பு செய்துகொண்டேயிருப்பான். சிறு பிள்ளை அப்படித்தானிருக்கும். எனினும். இறைவழிபாட்டு நேரத்திலே கூட அவன் தானும் கும்பிடாமல் மற்றவர்களையும் வழிபடவிடாமல் குறும்புசெய்து திரிவது தான் தாயாருக்குப் பெரும் கவலையைக் கொடுத்தது. "எப்படியும் பையனை வழிக்குக் கொண்டுவரவேண்டும்" என அவள் தீர்மானித்தாள்.

முக்கியமான வழிபாட்டுத் தினங்களில் ஏதாவது உணவுப்பொருளைச் செய்து இறைவனுக்கு நிவேதித்து அம்மா வழிபட ஆரம்பித்தாள். நேரமில்லாவிடில் அவல், சுண்டல் போன்றவற்றைச் செய்வாள். அதற்குமியலாதபோது பழங்களையோ, கற்கண்டு, சர்க்கரை ஆகியவற்றில் ஒன்றையோ வாங்கிவந்து நிவேதனம் செய்வாள். ஒழுங்காக அமர்ந்து வழிபட்ட அனைவருக்கும் வழிபாடு முடிந்ததும் நிவேதனப் பொருளைப் பங்கிட்டுக் கொடுப்பாள்.

அம்மா தரப்போகும் தின்பண்டத்திற்காகச் சிறுவன் வழிபாட்டிற் கலந்து கொள்ளத் தொடங்கினான். இடையே ஏதாவது செய்தால் நிவேதனப்பொருள் கிடைக்காது. எனவே மிகவும் நல்ல பிள்ளையாக இருப்பான். எல்லோருடனும் சேர்ந்து பஜனை செய்வான்.

அப்போது வீட்டில் ஓடிவிளையாடும்போது, "வா வா முருகா வடிவேல் முருகா" என அவனுடைய வாய் பாடும். இப்பொழுது அவன் மிகவும் மாறிவிட்டான்.

"மகன் குறும்புக்காரன். அவன் இறைவழிபாட்டில் ஈடுபடமாட்டான்" எனத் தாயார் விட்டிருந்தால் அவன் மாறியிருக்க வாய்ப்பில்லை. அவனை மாற்றவும் ஒரு வழிமுறையை அவள் திட்டமிட்டுக் கடைப்பிடித்தாள். எமது சமயப்பெரியார்களும் தீயவழியிற் செல்லும் மக்களையும் இறை வழிபாட்டில் ஈடுபடச்செய்ய கதைகளையும் ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளதை நாம் கவனிக்கலாம்.

உதாரணமாக சிவராத்திரி புராணம், சிவராத்திரி விரத மகிமையை உரைப்பதற்காகச் சில கதைகளைக் கூறுகின்றது. அவற்றுள் ஒரு கதையைப் பார்ப்போம்.

சிந்துநதிக்கரையிலே சுந்தரபுரி என்னும் சிறந்த நகரமிருந்தது. அதனை பரபுரஞ்சயன் என்ற பெயர் கொண்ட அரசன் ஆட்சிசெய்துவந்தான். அவ்வரசரது அரண்மனைப் புரோகிதருக்குக் குழந்தைப் பாக்கியமில்லை. அதனால் அவர் இறைவனை வேண்டித் துதித்தார். அதன் பலனாகப் பிறந்த புத்திரனுக்கு சுகுமாரன் என்று பெயரிட்டு மிகச் சிறப்பாக வளர்த்தார்.

தந்தை நான்கு வேதங்களையும் முறைப்படி கற்பிக்க, மகனோ உலகிலுள்ள தீய செயல்களையெல்லாம் செய்யப் பழகினான்.

அவனது செயல்களைப் பொறுக்க முடியாத மக்கள் அரசனிடம் வந்து முறையிட்டனர். அவனது தீய செயல்

களைப்பற்றிக் கேள்வியுற்ற அரசன் மிகுந்த கோபமடைந்தான். உடனே சுகு மாரனைப் பிடித்துவருமாறு கட்டளையிட்டான். அவனைத் தேடிக்கண்டுபிடித்துக் கூட்டிவந்ததும் அரசன் சுகுமாரனைக் கொல்வதற்குத் தீர்மானித்தான். அரசனது மந்திரிமார்கள் "சுகுமாரனை நீங்கள் கொன்றால் ஓர் அந்தணனைக் கொன்ற பாவம் உங்களுக்கு வந்துசேரும் எனவே, கொல்லாதீர்கள்" என ஆலோசனை கூறினர். அதனால் சுகுமாரனைக் கொடிய வனத்திற்குள்ளே கொண்டுசென்று விடுமாறு அரசன் கட்டளையிட்டான்.

வனத்தில் விடப்பட்ட சுகுமாரன் அலைந்து திரிந்தபோது ஒரு புலைப் பெண்ணைச் சந்தித்து அவளுடன் வாழ்க்கை நடத்தினான். அவர்களுக்கு ஐந்து கொடிய ஆண்பிள்ளைகளும், இரண்டு பெண்பிள்ளைகளும் பிறந்தனர். சிறிது காலத்தின்பின் மனைவி நோயுற்று மரணமானாள். தனது புதல்விகளிருவரும் வளர்ந்ததும் அவர்களைச் சுகுமாரன் மணந்துகொண்டான்.

ஒருநாள் அவன் தன் மனைவிகளுக்குச் சூட்டவென மலர்கொய்ய ஒரு பூங்காவிற்குச் சென்றான். அன்று சிவ ராத்திரி. அப்பூங்கா ஒரு சிவன்கோவிலருகே அமைந்திருந்தது. இவன் பூக்களைக் கொய்து கொண்டிருக்கும்போது நள்ளிரவு நேரம் மக்கள் "ஹர ஹர சங்கர" என போற்றிநிற்கச் சிவலிங்கப் பெருமானுக்குத் தீபாராதனை நடைபெற்றது. இவனும் அத்தரிசனத்தைப் பெற்றான்.

மீண்டும் இவன் கொடியவனாகவே வாழ்ந்து வந்தான். அவன் மரணமடையும் காலம் வந்தது. யமதூதர்கள் சுகுமாரனைச் சூழ்ந்து கொண்டனர். அவன் செய்த பாவங்களுக்காகப் பல்வேறு சித்திரவதைகள் செய்யத் தீர் மானித்தனர்.

பற்றுமென்பர்சிலர் பாவி யாவிபத றிப்பதைக்கவிரி பாறையி
னெற்று மென்பர்சில ரீரரவ தனையீரு மென்பர்சிலர் பாரெலா
முற்று ணர்ந்துகொலை செய்த கால்கரமோ டித்தி ரென்றிவையுரைத்துமுன்
மற்றடம்புய முரிந்து சிந்திட வரிந்து கட்டினர் வருத்தியே

என்ற சிவராத்திரி புராணப்பாடல் பாவிகளுக்கு யமகிங்கிரர் செய்யும் வதைகளைக் கூறுகிறது. இவ்வாறு அவர்கள் சுகுமாரனை வதைக்க நினைத்த வேளை சிவபெருமான் திருநந்திதேவரை அழைத்து, சுகுமாரனைப் பொன்விமானத்தில் ஏற்றிவருமாறு பணித்தார். நந்திதேவர் சிவகணங்களிடம் அதனைத் தெரிவிக்க, அவர்கள் சிவபெருமானின் கட்டளையை நிறைவேற்றச் சென்றனர். யம தூதர்கள் அவனை விடமறுக்கவே அவர்களுடன் போரிட்டுச் சுகுமாரனைக் கொண்டு சென்றனர். அவன் சாரூபப் பதவியடைந்தான்.

யமதூதர்கள் கூற்றுவனிடம் சென்று நடந்ததைக் கூறினர். யமனுக்குக் கோபமேற்பட்டது. சித்திரகுப்தனிடம் "சுகுமாரன் ஏதாவது புண்ணியம் செய்துள்ளானா?" என யமன் விசாரித்தான். "அவன் செய்தவையெல்லாம் கொடிய பாவங்களே" எனச் சித்திரகுப்தன் பதிலளித்தான். உடனே யமன் தன் எருமை வாகனத்திலேறிக் கயிலாயத்திற்குச் சென்று சிவபிரானிடமே காரணத்தைக்

தொடர்ந்து செய்யப்படாத முயற்சி தோல்வியையே தரும்.

கேட்டான். சிவபெருமானும் சிவராத்திரியில் சிவதரிசனம் செய்யும் ஒருவர் பெறும் பேற்றை விளக்கினார்.

இங்கே சுருக்கமாகக் கூறப்பட்ட இக்கதை சிவராத்திரி புராணத்தில் 188 பாடல்களில் கூறப்படுகிறது. சிவராத்திரி விரதமகிமையை உணர்த்துவதற்காகச் சுகுமாரனை மிகக் கொடியவனாகவும் மிகுந்த கீழ்த்தரமானவனாகவும் கதை சித்திரிக்கிறது. அப்படிப்பட்டவனுக்கே சாருபமுத்தி கிடைத்ததென்றால் நாமும் அவ்விரதத்தைக் கைக்கொண்டு நோற்றால் பலன் கிடைக்கும் என எங்கள் மனத்தில் ஆசையைத் தூண்டவேண்டுமென்பதே இக்கதையின் நோக்கம். இத்தகைய பல கதைகள் உள்ளன. அவற்றைக் கேட்டுவிட்டு "நாம் எல்லாப் பாவங்களையும் செய்யலாம், செய்துவிட்டு ஒருநாள் உண்ணாமலிருந்தால் எல்லாப்பாவங்களும் பஸ்மமாகிவிடும்" என்றோ, 'பணத்தைக் கொடுத்து வீட்டை வாங்குவதுபோல வீடு பேற்றையும் வாங்கிவிடலாம்' என்றோ கருதக்கூடாது. கதைகள் எழுந்த காரணத்தைப் புரிந்துகொண்டால்தான் அவற்றின் நோக்கம் கைகூடும்.

(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| திருமதி பொ. இரத்தினசோதி கதிரவேற்பிள்ளை வீதி | பருத்தித்துறை | 12000. 00 |
| K.V. துரைசாமி ஞாபகார்த்தமாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. கிருபாகரன் | அச்சுவேலி தெற்கு | 2000. 00 |
| ஸ்ரீஸ்கந்தராசா ராஜேஸ்வரி | ஜேர்மனி | 1000. 00 |
| அற்புதராசா வதனா யாப்புலம் | கரவெட்டி கிழக்கு | 500. 00 |
| த. சுதர்சன் | பருத்தித்துறை | 1000. 00 |
| V. முருகவேள் முத்திரக்கட்டை ஒழுங்கை | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| கனகசபாபதி | மிருசுவில் வடக்கு | 1000. 00 |
| நடராசா சிவதாஸ் துன்னாலை மேற்கு | கரவெட்டி | 4000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் J.P | பத்தமேனி | 1000. 00 |
| இ. சண்முகசுந்தரம் ஆசிரியர் | மந்திகை | 500. 00 |
| Dr. திருமதி கு. பத்மராணி பல் வைத்தியர் | அச்சுவேலி | 3000. 00 |
| கி. சிவப்பிரகாசம் | புலோலி தெற்கு | 3000. 00 |
| அ. சண்முகராசா பேராசிரியர் V. சிவசாமி மூலம் | லண்டன் | 19000. 00 |
| தேவகாந்தன் | ஏழாலை | 1000. 00 |
| பா. முரளிதரன் செட்டித்தெரு | பருத்தித்துறை | 500. 00 |
| ஏகாம்பரம் ரெக்ஸ் பெரியகடை | யாழ்ப்பாணம் | $^1/_2$ மூடை அரிசி |
| செல்வி ச. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | | 1000. 00 |
| A.S.S. இராமச்சந்திரன் மாலிசந்தி | அல்வாய் | 1000. 00 |
| திருமதி யோ. நவரத்தினராஜா | இளவாலை | 1000. 00 |
| திருமதி Dr ஆ. நகுலேந்திரன் | U.S.A | 21340. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் இளைப். அதிபர் | மயிலியதனை | 8000. 00 |
| சி. நவரத்தினம் ஆசிரியர் தல்லையப்புலம் | கரவெட்டி | 3000. 00 |

(தொடரும்...

சத்தியத்தைச் சிந்தித்தால் உள்ளத்தில் ஒளி பிறக்கிறது.

# ஆனந்த நிலையம்

இரா செல்லவடிவேல் அவர்கள்

குடும்பம் பற்றிய பெரியவர்களின் சிந்தனைகள் இருதரப்பட்டனவாகவே இருக்கின்றன. இதன் காரணமாகவே தாரமும் குருவும் தலைவிதிப்படியே என்றார்கள். உணர்வுடன் அறிவும் கலக்கும் பொழுது குடும்பம் ஆனந்தநிலையம் ஆகிவிடும். அனைத்தும் உங்கள் கையில்தான் இருக்கின்றன.

சிவன் பார்வதி குடும்பப்படத்தில் மயிலும் பாம்பும் சேர்ந்து இருக்கமுடியும் எனக் காட்டியிருப்பது பெரும் தத்துவமல்லவா!

புரிந்தவர் துணையாகி ஆரம்பிக்கப்படும் குடும்பம் அன்பு எனும் நீர் ஊற்றப்பட்டு வளர ஆரம்பிக்கிறது. சரியான குடும்பத்தில் கணவன், மனைவி ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். ஆண் பிரமச்சாரி நிலையில் தனக்காக வாழ்கிறான். கிருகஸ்த நிலையில் மனைவியை இணைத்துக்கொண்டு மனைவிக்காக விட்டுக்கொடுக்க ஆரம்பிக்கிறான். அன்புடைமைக்குக் காரணமாக மழலைச் செல்வம் கிடைத்ததும் கணவன், மனைவி இருவரும் குழந்தைக்காக அனைத்தையும் தியாகம் செய்யத்தொடங்கி விடுகிறார்கள். அன்பு, அருள், தியாகம் இந்தப் படிநிலை தமிழர் குடும்பவாழ்வின் சிறப்பு.

குடும்ப வாழ்வில் பிள்ளைச் செல்வம் முக்கியமானதாகும். உலகில் மலர்வதற்காக இறைவனின் இல்லத்தில் இருந்து விழுந்த இனிமை நிரம்பிய புதிய மொட்டே குழந்தையாகும். வானிலிருந்து மாசற்ற நிலையில் விழும் உயிருள்ள ஜொலிக்கும் ஆபரணங்களாக இறைவன் மனிதனுக்கு வழங்கும் அருட்கொடை.

குழந்தைபற்றி,

❖ படைப்புப் பல படைத்து பலரோடுண்ணும்
உடைப் பெருஞ் செல்வராயினும் மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயங்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம் வாழு நாளே
(அறிவுடைநம்பி புறநானூற்றில்)

❖ மின்னல் ஒளியே! விலைமதியா ரத்தினமே!
கன்னல் பிளிந்து கலந்த கனிச்சாறே
(பாரதிதாசன்)

❖ கற்கண்டுச் சீனி
கனிவகைகள் எல்லாம் உன்
சொற்களால் நானடையும்
சுகத்தினுக்கே ஈடாமோ.
அழ வள்ளியப்பா

இத்தனை சிறப்புக்குரிய குழந்தைகள் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்று நான் சொல்லமாட்டேன். குழந்தை வளர்ப்பில் பெற்றார் பெரும் கவனமெடுக்க வேண்டும். அவசர உலகில் குழந்தைக்குப் பால் கொடுக்கத் தாய்க்கு நேரமில்லை! பொருளாதாரச் சமூக அமைப்பு - மாற்றம் ஏற்படுத்தியுள்ள விளைவு இது! ஆணும் பெண்ணும் வேலைக்குச் செல்லும் குடும்பங்கள் பல பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றன. இவர்களால் தமது சந்ததியைச் சரியான முறையில் நெறிப்படுத்த முடிவதில்லை. (சில குடும்பங்கள் விதிவிலக்காக இருக்கலாம்)

குழந்தை வளர்ப்பு மிகப்பெரிய கலையாகும். வீட்டிலுள்ள பெரியவர்கள் பாட்டா, பாட்டி போன்ற பல உறவுகள் குழந்தை வளர்ப்புமுறைபற்றி அனுபவப் படிப்புப் பெற்றிருந்தனர். கூட்டு வாழ்க்கை முறையின் பயன் இதுவாகும். இப்பொழுது தனிக்குடும்ப அமைப்பு ஏற்பட்டு உறவுப்பாலம் அறுபட்டுக்கிடக்கிறது. குழந்தைவளர்ப்பு நிலையங்கள் தொடங்கிவிட்டன. அந்தக் காலத்தில் பல பிள்ளைகளைப் பெற்றார்கள் வளர்த்தார்கள். வளமாக வளர்த்தார்கள். இன்று பிள்ளைகள் குறைவு. காட்டுமிராண்டிகளாக வளர்கிறார்கள். குழந்தைகள் உடல் ஆரோக்கியமாக வளரவேண்டும் என்பதிற் காட்டும் அக்கறை அறிவுடைய குழந்தைகளாக வளர்க்கப்படல் வேண்டும் என்பதிற் காட்டப்படுவதில்லை.

உலகத்தில் சிக்கலான பதவி எது? அம்மா, அப்பா பதவி. எந்தத் தகுதியும் இல்லாமல் (ஆண், பெண் என்பது தவிர) பலர் அம்மா, அப்பா ஆகிவிடுகிறார்கள். விபத்தாகக் குழந்தை பிறந்து விடுகிறது. பொருளாதாரச்சுமை ஆரம்பமாகிறது. துன்பமோ! துன்பம்!

சுவாமி சிவானந்தர் ''நல்ல பிள்ளை பெறலாம்'' எனும் நூல் எழுதியுள்ளார். அதில் தாயிடமிருந்து பண்பாடு, கலாசாரம் போன்றவற்றை மொழிவழி குழந்தை கற்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார். பிள்ளைகளுக்கு முன் அடிக்கடி சண்டையிடும் பெற்றோர் மிக மோசமான முன் உதாரணம்.

உங்களுடைய குழந்தைகளைப் பயத்தால் உன்னுடன் இணைப்பதைவிட மரியாதையுடனும், மிருதுத் தன்மையுடனும் உங்கள்பால் அரவணைத்துக் கொள்வது முக்கியமானது. குழந்தைகளுக்கு ஓடி ஆடி விளையாட முழுச் சுதந்திரம் வழங்கவேண்டும். புரட்சிக்கவி பாரதிகூட குழந்தைப் பருவத்தில் அச் சுதந்திரத்தை இழந்திருக்க வேண்டும். அதனால்த்தான் பின்னாளில் குழந்தைகளுக்கு ''ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருத்தல் ஆகாது பாப்பா'' என்று பாடினார் போலும்.

மிகச்சிறுவயதில் பிள்ளைகளைப் பாடசாலையில் இணைத்தல் கூடாது. மூன்றுவயதில் பிள்ளையைப் பாலர்பாடசாலையில் இணைக்கலாமா? இங்குள்ள சூழ்நிலையில் பல்கலைக்கழகப் படிப்பை முடிக்கும்வயது சராசரி 30ஆகிறது. 3 வயதிலிருந்து 30 வயதுவரை கல்லூரிப் படிப்பு என்பது இளைஞர்களுக்கு சலிப்பை ஏற்படுத்துகிறது. 6வயதிற்கு முன்னர் பாடசாலையில் சேர்க்கக்கூடாது எனக்கருதுகிறேன். தனது ஆயுளின் ஏறத்தாழ, நான்கில் ஒரு பங்கைக் கல்விக் கூடங்களிலேயே செலவிட்ட பிறகும், வாழச்சொல்லிக் கொடுக்காத - வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்காத - ஒரு

மென்மையை இழப்பவர் நன்மையை இழந்து விடுகிறார்.

சொட்டுத் தன்னம்பிக்கையைக்கூட ஊட்ட முடியாத கல்விமுறையைத்தான் பிள்ளைகள் கற்று வருகிறார்கள். இது மாற்றியமைக்கப்பட வேண்டும். தாய்மொழி, உலகமொழி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு இவற்றுடன் சமயக்கல்வியும் கட்டாயம் போதிக்கப்படல் வேண்டும்.

பெற்றார் தமது எண்ணங்களைப் பிள்ளைகள்மீது திணிக்கக்கூடாது. பிள்ளைகளைச் சுயமாகச் சிந்தித்து முடிபெடுக்கவிடவேண்டும். 'கருவில் திருவுடையார்' என்று பிறக்கும்போது சிறப்புடன் பிறந்தவர்களும் உண்டு. முயன்று பாடுபட்டு முன்னிடத்தை எட்டியவர்களும் உண்டு. உணர்தலும் புரியவைத்தலுமே அப்பாவின் கடமை. ஆனால், பணியவைத்தலும் திணித்தலுமே இன்று பல அப்பாமாரின் நோக்கமாகவுள்ளது. இது தவறானதாகும். பிள்ளைகளின் செயல்கள் எல்லைமீறிப் போவதைத் தடுக்கும் உரிமை பெற்றோருக்கு உண்டு.

பெற்றோர் பலர் பிள்ளைகளின் தவறுகளை மூடிமறைக்கவே முயலுகின்றனர். எது தவறு, எது சரி என்கிற நேர்மை உணர்வு பிள்ளைகளுக்கு ஏற்படுத்தப்படவேண்டும். என்ன தப்புச் செய்தாலும் நாம் காப்பாற்றப்படுவோம் என்கிற எண்ணம் பிள்ளைகளுக்கு உண்டாவது நல்லதன்று. பிள்ளைகளின் தவறுகளைமூடிவிட்டுப், பாசத்தால் நியாயப்படுத்தாதீர்கள்.

குறிப்பிட்ட வயதுவரை வளர்க்கப்பட்ட இளைஞர் (ஆண், பெண் இருபாலரும்) சுயதரிசனத்திற்கு ஆயத்தமாக வேண்டும். இது கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியது இனிமேல் தான் நிறையப் படிக்கப்போகிறோம் என்ற வாழ்க்கை அனுபவத்திற்கு எந்தப்படிப்பும் ஈடாக முடியாது. பல இளைஞர்கள் பல்கலைக்கழக வளாகத்தில் புரட்சிப்புயல்களாகக் காணப்படுகிறார்கள். சாதிகள் இல்லையடி பாப்பா என்பாரும் சீதனக் கொடுமையை இல்லாது செய்வோம் என முழங்குவாரும் ஆண், பெண் இருவரும் சமமானவரே! எனக் குரல் கொடுப்பவரும்.... இப்படியான சிந்தனை முத்துக்களை உதிர்த்தவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியதும் சாதி, சமயம் பார்த்துச், சீதனம் பேசி அவசரமாகத் திருமணம் செய்யக்குறிப்பைக் கொடுத்து விடுவார்கள் - தரகர்களிடம்! அப்படியானால் படிக்கும்போது ஏற்பட்ட காதல்! அது வெறும் பொழுதுபோக்கு அவ்வளவுதான். இளைஞர்களே உங்களை நீங்கள் சுயதரிசனம் செய்யுங்கள். புரட்சிப்புயல்களாக இருங்கள் வாழ்த்துகிறேன். புஸ்வாணம் ஆகிவிடாதீர்கள். சமூகம் உங்களைப் பார்த்துச் சிரிக்கும்.

இளைஞர்களே! உங்களை நீங்கள் செதுக்கிக் கொள்ளுங்கள். மற்றவர்களைச் செதுக்கவிட்டால் உங்கள் உடல் ரணகளம் ஆகிவிடும். சிந்திக்கத் தெரியாதவனை மன்னிக்கலாம். ஆனால் சிந்திக்க மறுப்பவனை மன்னிக்க முடியாது. எதையும் தீரச்சிந்தித்து முடிபுக்கு வாருங்கள். நல்ல நட்பு, காதல் இன்று தேடினாலும் கிடைப்பதில்லை. இங்கேதான் உனது வாழ்வுக்குச் சாவுமணி அடிக்கப்படுகிறது. உன்னை வளர்த்து வாலிபனாக்கி உலாவவிட்டுள்ள பெற்றோர் கண்ணுக்குத் தெரியாமற் போகிறார்கள். எங்கோ முளைத்த 'காளான்' உனக்குக் கவர்ச்சிப்பொருள் ஆகிவிடுகிறது.

**பிறருக்காக உழையுங்கள் பிறர் உழைப்பை எதிர்பார்க்காதீர்கள்.**

எரிக்க வேண்டியவைகளைக்கண்டு சிரித்துக்கொண்டிருக்கிறாய்! விரும்பியது அமையாவிட்டால் அமைந்ததை விரும்பு என்கிறது உபநிடதம். அமைந்தது நீ விரும்பியதாய் இருந்தால் நீ விரும்பியதை அமைத்துக்கொள்... அது கல்வியாகவும் இருக்கட்டும். மற்று ஏதுவாயினுமாகட்டும். தன்னம்பிக்கையும் மன உறுதியுமிருந் தால் வாழ்க்கையில் எதுவும் குறைபாடா காது. அநீதிக்கெதிராகப் போராடப்பழகு.... ஆனால் நீயே அநீதியின் வடிவம் எடுக் காதே! வாழ்க்கை ஒரு சறுக்குநிலம். அந்தச் சறுக்குநிலத்தில் விழாமல் நடக்க நம்பிக்கை என்ற ஊன்றுகோலைப் பிடித்துக்கொள். நான் பெரிதா? நீ பெரிதா? இதுதான் இன்று பல குடும் பங்களை நாசமாக்குகிறது. கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போராடுவதை நிறுத்திக் குடும்பப் பிரச் சினைகளுக்காகப் போராடுங்கள். பிரச் சினை வரும்போது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முயற்சிசெய்ய வேண்டும். ஒரு வாரத்தில் ஒரு நாளாவது குடும்பச் சட்ட சபை கூட வேண்டும். உறுப்பினர்கள் விவாதம் நடாத்த வேண்டும். அப்பா எனும் சபாநாயகர் நடுவுநிலைமையுடன் தீர்ப்புக்கு வரவேண்டும். இதுதான் பிரச் சினையை அணுகும்முறை. குடும்பத்தைக் கோயிலாக்கும் முறை. நல்ல குடும்பத்தை அமைத்து ஆனந்த நிலையம் காண்போம்.

(தொடரும்...

## கந்தன்

பகைவருடைய பராக்கிரமத்தை வற்றச் செய்கின்றவன். ஆறு திருமேனி பொருத்தப்பெற்றவன். ஆன்மாக்களாகிய யானைகளைக் கட்டும் கட்டுந்தறி போன்றவன் என்று பல பொருள்களையுடைய அரிய திருநாமம் "கந்தன்" என்பது. சுப்பிரமணியருடைய 108 திருநாமங்களில் முதலில் நிற்பது "ஸ்கந்தாய நம" என்பது. எம்பிரானுடைய புராணத்துக்கும் சுப்பிரமணிய புராணம், சண்முக புராணம் என்று பெயர் அமையாது. "கந்தபுராணம்" என்று பெயர் அமைந்திருப்பதனாலும் கந்த நாமத்தின் முதன்மையைக் கருத்திலிருத்துக. இனி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தர் அநுபூதி, கந்தர் கலிவெண்பா என்கின்ற அரிய நூல்களிலும் 'கந்த' என்ற சொல்லாற் பெயர் அமைந்திருப்பதையும் இங்கு உன்னுக

-சிதம்பரம் 'திருப்புகழ்' விரிவுரையில் வாரியார் சுவாமிகள்-

## ஞானச்சுடரே நீடூழி வாழ்க!

சிந்தனையில் இனிக்கும் தத்துவ முத்துக்களைத்
தாங்கியே வந்திடும் தனித்துவப் பெட்டகம்
கந்தனின் திருமுகச் சுந்தர வதனமதிற்
புன்னகை தவழ்ந்திடும் கருத்துக் கலசம்
எந்தனின் உள்ளமதைக் கொள்ளையே கொண்டிட
எழில்மிகு புத்தகமே ஞானக் கருவூலமே
உந்தனின் பெருமை சொல்லவும் முடியுமோ
ஞானச் சுடரே நீ நீடூழி வாழ்க!

*சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்*

மகிழ்ச்சி என்னும் கோட்டையின் முதல் வாயில் அமைதி.

உ

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



மனிதநேயத்தை மறந்து மனிதன் செயற்படுகின்ற இவ்வுலகில் இப்படித் தான் வாழவேண்டுமென்ற நல்ல இலட்சி யத்துடனும் பலர் வாழ்ந்துகொண்டிருக் கின்றனர் மற்றவர்களுக்கு உதவுகின்ற தர்மநெறி தவறாத அந்த உன்னதமான வாழ்க்கைப் பயணத்தில் பல தடைகளை யும் பல இடர்களையும் இந்த உன்னத மானவர்கள் எதிர்கொள்ள நேரும்பொழுது அவர்கள் மட்டுமல்ல அவர்களை நன்கு விளங்கிக்கொண்ட ஏனையவர்களும் கூட வேதனைப்படுவதையும் காண்கின்றோம்.

இறைவழிபாட்டிலோ, இறை தொண்டிலோ அதிகம் ஈடுபாடில்லாத நிலையிலும்கூட மனிதநேயத்துடன் மற்ற வர்களுக்கு உதவுகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களையும் நாம் இவ்வுல கில் காண்கின்றோம். உண்மையில் மனித நேயமுள்ள இவர்கள் எல்லோருமே இறை வனது ஆசீர்வாதத்திற்கும் இறையருளிற் கும் உட்பட்டவர்களாகவே கருதப்படு வார்கள்.

மேலும் இப்படித்தான் வாழ வேண்டுமென்று தர்மநெறியில் வாழ்ந்து கொண்டு அதேவேளை இறைதொண்டி லும், சமூகப்பணியிலும் ஈடுபட்டுக்கொண் டிருக்கின்ற உத்தமர்கள் எமக்கு சாதா ரணமானவர்களாகத் தெரிந்தாலும் அவர் கள் சாதாரணமானவர்கள் அல்ல. இந்த உத்தமர்கள் இறைவனது ஆசீர்வாதத் திற்கும் இறையருளிற்கும் பாத்திரமான வர்கள். இவர்களுடன் இறைவன் எப்போ தும் நெருக்கமாகவே காணப்படுகின்றார். இவர்களை வேண்டிய நேரத்தில் வேண் டியவிதமாக இறைவன் வழிப்படுத்திக் கொண்டிருப்பார். இதனை மற்றவர்கள் உணர்ந்துகொள்வது கடினமானது. ஆனால் இறையருளிற்கு உட்பட்ட இந்த உத்தமர்கள் இவற்றை எல்லாம் அனு பவத்தால் நன்கு உணர்ந்து அவற்றை அமைதியாக உள்வாங்கி தமது அன்றாட வாழ்க்கையை வழிப்படுத்திக் கொண்டிருப் பார்கள். இப்படியான ஒருவருடன் தொடர்பு பட்ட சந்நிதியானது அற்புத நிகழ்வொன் றினை இந்தமலரில் அடியார்களுக்கு வெளிப்படுத்துகின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வருகை தருகின்ற அன்பர்கள் அங்கே இடம்பெற்றுள்ள பூஜை அறையை இலகு வாக இனங்கண்டுகொள்ள முடியும். அது மட்டுமல்ல அந்த பூசை அறையுடன் இணைந்துள்ள முன் மண்டபத்தில் பரவச மூட்டும் அருளாளர்களது உருவப்படங்கள் இடம்பெற்றுள்ளதையும் அவதானிக்க முடியும்.

சந்நிதியான் ஆச்சிரமம் பல்வேறு

சமயத் தொண்டுகளையும், சமூகத் தொண்டுகளையும் தொடர்ச்சியாகவும் சிறப்பாகவும் செயற்படுத்தி வருவதனால் ஆச்சிரமத்தினை புனிதமான இடமாகவே அடியார்கள் கருதுகின்றனர். இந்தநிலையில் ஆச்சிரமத்தின் பூஜை அறையை மேலும் புனிதம் நிறைந்த ஒரு இடமாகவே ஆச்சிரமத்தின் சுவாமிகள் செயற்படுத்திவருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பூஜை அறையில் தினமும் மூன்றுநேரப் பூஜைகள் ஆச்சிரமத்தின் சுவாமிகளால் நடாத்தப்படுகின்றன. அது மட்டுமல்ல வைகாசி விசாகம் உட்பட மிகவும் முக்கியமான தினங்களில் எம் பெருமானுக்கு ஆச்சிரமத்தின் பூஜை அறையில் அபிஷேகம் இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. இந்த அபிஷேகங்கள் முறைப்படியும் புனிதமான பொருட்களைக் கொண்டும் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றது. உண்மையில் அபிஷேகத்திற்கு சில நாட்களுக்கு முன்பே அதற்காக திட்டமிட்டு பழவகைகள் மற்றும் திரவியங்களை எங்கு வாங்குவது, யார் மூலம் வாங்குவது போன்ற செயற்பாடுகளில் சுவாமிகள் ஈடுபடுவது வழக்கம்.

உண்மையில் ஆச்சிரமத்தின் பூஜை அறையில் அபிஷேகத்தினை நடாத்தவேண்டுமென்றும், அதனைத் தவறாது தொடர்ந்து நடாத்தவேண்டுமென்றும் ஆச்சிரமத்தின் சுவாமிகளுடன் இணைந்து அவருக்கு ஊக்கமும், உற்சாகமும் வழங்கிக்கொண்டிருப்பவர் பபாச் சுவாமிகள் என அழைக்கப்படும் அருட் செல்வம்சுவாமி ஆவார். இணுவிலைச் சேர்ந்த பபாச்சுவாமிகள் பொதுவாக இந்த அபிஷேகத்திற்கு தேவையான பழவகைகள் மற்றும் அபிஷேகத்திரவியங்களை பல இடங்களிலும் தேடிப்பெற்று ஆச்சிரமத்திற்கு வழங்குவது வழக்கம்.

30.05.2007இல் இடம்பெற்ற வைகாசிவிசாகத் தினத்தன்று வழமை போல இந்த வருடமும் ஆச்சிரமத்தின் பூஜை அறையில் அபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் அந்த அபிஷேகத்தை நடத்திக்கொண்டிருந்த ஆச்சிரமத்தின் சுவாமிகளுக்கு மட்டும் தான் தெரியும், இந்த அபிஷேகத்தை நடத்துகின்ற ஒரு கருவியாக மட்டுமே நான் இங்கே செயற்படுகின்றேன் என்ற அந்த் உண்மை.

"நிற்பதும் நடப்பதும் நின்செயலாலே நினைப்பதும் நிகழ்வதும் நின் அருளாலே..." என்று தொடரும் பாடலில் இடம்பெற்றுள்ள சொற்பதங்கள் வெறும் கற்பனை வார்த்தைகள் அல்ல. அவை எல்லாம் எவ்வளவு நிதர்சமான உண்மைகள் என்பதை தனது வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல விதமான அனுபவங்களினூடாக தெளிவாக உணர்ந்துகொண்டவர் ஆச்சிரமத்தின் சுவாமிகள். இந்த அபிஷேக விடயத்திலும் சந்நிதியான் மீண்டுமொருமுறை அந்தத் திருவிளையாடலை வெளிப்படுத்தியிருப்பதை தனக்குள் மீட்டு ஆனந்தப் பரவசமடைந்தவாறு சுவாமிகள் அந்த அபிஷேகத்தை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விஷேட தினங்கள் பற்றித் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கும் ஆச்சிரமத்தின் சுவாமிகள் 2007ஆம் ஆண்டு வைகாசி விசாகதினம் எப்பொழுது இடம்பெறுகிறது என்பது பற்றியும் ஏற்கனவே நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள். அதுமட்டுமல்ல அன்றைய நன்நாளில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்

தில் வழமைபோல ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்படும் அபிஷேகத்திற்கான கொடுப்பனவை ஆலயத்திற்கு வழங்கியதுடன் ஆச்சிரமத்தில் இடம்பெறும் அன்னதானம், அறுபத்துமூவர் குருபூசை போன்றவற்றிற்கான முன் ஒழுங்குகளையும் திருப்தியாகச் செய்து முடித்திருந்தார்கள்.

ஆனால் ஆச்சிரமத்தில் சுவாமிகள் தானே நேரடியாகச் செய்யவேண்டிய மிகமுக்கியமான கைங்கரியத்தை இறுதி நேரம்வரை முற்றாக மறந்து செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். கலியுகக்கந்தன் முருகப்பெருமான் உதித்த தினமான விசாக தினத்தில் வழமைபோல சுவாமிகள் ஆச்சிரமத்தின் பூசை அறையில் பூசைக்கு முன்பு மேற்கொள்ளவேண்டிய அந்த அபிஷேகத்திற்குரிய முன் ஆயத்தங்கள் எதையும் செய்யவில்லை. அபிஷேகம் இடம்பெறுவதற்கு ஒரு நாள் மட்டுமே இருக்கின்ற நிலையிலும்கூட சுவாமிகள் அதனை எல்லாம் முற்றாகவே மறந்துவிட்டார்கள். இதுபோன்ற தவறுகள் இதற்கு முன்பு எப்பொழுதும் இடம்பெறவில்லை. இது உண்மையில் ஒரு அசாதாரண விடயமாகும்.

இந்த அபிஷேகம் சுவாமிகளால் மேற்கொள்ளப்பட வேண்டிய, அவருடன் நேரடியாகத் தொடர்புபட்ட விடயமாக இருந்தமையால் இதற்கான ஒழுங்குகளை இறுதிநேரத்தில் செய்வோம் என்ற சிந்தனை ஆரம்பத்தில் அவரது ஆழ்மனதில் பதிந்திருந்தது உண்மையே. ஆனாலும் இறுதி நேரத்தில் "ஞானச்சுடர்" வெளியீடு உட்பட ஆச்சிரமத்தில் அவருக்கு இருந்த பல்வேறு சமய சமூகப் பணிகளின் நெருக்கடிகளின் மத்தியில் ஆச்சிரமத்தின் சுவாமிகள் அவரை அறியாமலே இந்த அபிஷேக விடயத்தை மட்டும் முற்றாக மறந்து விட்டார்கள்.

அதுமட்டுமல்ல இந்தஅபிஷேக விடயத்தில் ஆச்சிரமத்தின் சுவாமிகளுடன் இணைந்து செயற்படும் பபாச் சுவாமிகளும் இந்த காலகட்டத்தில் வேறு ஆலயங்களில் இருந்த வேலைப்பளு காரணமாக ஆச்சிரமத்திற்கு வருகைதர முடியாது போய்விட்டது. இந்த அபிஷேகத்தினை நடாத்துகின்ற நாள்நெருங்கும் பொழுது கதையோடு கதையாக அதனை ஞாபகப்படுத்தி அபிஷேகத்திற்கு சில நாட்களுக்கு முன்பே இது தொடர்பான வேலைகளில் ஈடுபடும் பபாச்சுவாமிகளும் ஆச்சிரமத்திற்கு அந்தக்காலகட்டத்தில் வருகைதராதிருந்ததும் இந்த அபிஷேக விடயத்தை சுவாமிகள் முற்றாக மறந்ததற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

இவ்வாறு ஆச்சிரமத்தில் எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்கின்ற புனிதம் நிறைந்த அந்த மிக முக்கியமான செயற்பாட்டை முற்றாகவே மறந்துவிட்ட நிலையில் 28.05.2007 திங்கட்கிழமை சுவாமிகள் வழமைபோல நித்திரைக்குச் சென்றார்கள்.

அதிகாலை 3.30 மணியளவில் ஆச்சிரமத்தின் சுவாமிகள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது நடுத்தர வயதைத் தாண்டிய ஒரு சாமியார் ஆச்சிரமத்தின் சுவாமிகளிடம் வந்து தனது தலையைத் தொட்டுக்காட்டி தனது தலை பாரமாக இருக்கிறது எனக் குறிப்பிட்டார்கள். அதுமட்டுமல்ல அந்த தலைப்பாரத்தைப் போக்குவதற்கு மருந்து பூசிவிடுமாறும் கேட்டுக்கொண்டார்கள். ஆச்சிரமத்தின் சுவாமிகளும் அந்த நடுத்தரவயதைத் தாண்டிய சாமியார் கேட்டுக் கொண்டதுபோலவே அவரது நெற்றியில்

அபாயத்தை எதிர்க்கத் துணிந்து அச்சத்தை வெல்பவனே வீரன்.

பக்குவமாக மருந்தினைத் தடவ ஆரம்பித் தார்கள். அவ்வாறு மருந்தினைத் தடவிக் கொண்டிருந்தவேளை அந்த சாமியாரது தலையில் இருந்து நாலாபுறமும் சந்தனக் குழம்பு வடிந்து வருவதை ஆச்சிரமத்தின் சுவாமிகள் நன்கு அவதானித்தார்கள்.

அதனை அவதானித்ததுதான் தாமதம் ஆச்சிரமத்தின் சுவாமிகளின் உடலில் மின்சாரம் பாய்ந்ததுபோன்ற உணர்வு ஏற்பட்டது. அது மட்டுமல்ல ஆச்சிரமத்தின் பூசை அறையில் தான் வேலனுக்கு அபிஷேகம் செய்கின்ற பொழுது அபிஷேகத்திரவியங்கள் நாலா புறமும் வழிந்து வருகின்ற அதே காட் சியை ஒத்ததாக இந்தக் காட்சியும் அமைந்திருப்பதை சுவாமிகள் உணர்ந்து கொண்டார்கள். இந்த உணர்வுபூர்வ மான காட்சிகளால் ஆச்சிரமத்தின் சுவாமிகள் நித்திரையிலிருந்து துடி துடித்து எழுந்தார்கள். அப்பொழுதுதான் தெரிந்தது தான் கண்டது கனவு என்பது. ஆனால் அந்தக் கனவின் மூலம் சந்நிதி யான் தனக்கு வெளிப்படுத்திய செய்தி யின் கருணையை நினைத்து உள்ளம் உருகினார்கள். வருடாவருடம் பூசை அறையில் மேற்கொண்டு வருகின்ற அபிஷேகத்தினை மறந்து அதற்குரிய ஆயத்தங்கள் எதனையும் செய்யாதிருந் தது மட்டுமன்றி அந்த அபிஷேகத்திற்கு இன்னும் ஒரு நாள் மட்டுமே இடைவெளி இருக்கின்ற நிலையில் சந்நிதியான் அதனை தக்க தருணத்தில், தக்க காட்சி யினூடாக வெளிப்படுத்திய அதிசயத்தை எண்ணி சுவாமிகள் ஆனந்தப்பரவச மடைந்தார்கள். இவ்வாறான அற்புத நிகழ்வில் மூழ்கிப்போன சுவாமிகள் பொழுது புலர்ந்ததும் அதாவது 29.05.2007 செவ்வாய்க்கிழமை முதல் வேலையாக மறுநாள் புதன்கிழமை அபிஷேகம் நடத் துவதற்குரிய அனைத்துப் பொருட்களை யும் ஆச்சிரமத்திலுள்ள அன்பர்கள் மூலம் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொண்டார்கள். மறுநாள் அதாவது விசாகதினமான 30.05.2007 புதன்கிழமை தான் வருடா வருடம் மேற்கொள்ளும் அந்த புனிதமான அபிஷேக நிகழ்வை முழுநிறைவுடன் செயற்படுத்தி முடித்தார்கள்.

ஆலயத்திலும் ஆலயச் சூழலிலும் தனக்காகவும் தனது அடியார் களுக்காகவும் நடைபெறுகின்ற காரியங் கள் ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடை பெறுகின்றனவா? என்று கண்காணிக்கின்ற காவல் தெய்வமாகவும் சந்நிதியான் காணப்படுகின்றான். அதில் தவறுகளோ தாமதங்களோ ஏற்படுமாயின் அவற்றை தனது அடியார்களுக்கு கனவுகள், காட்சி கள் மூலம் வெளிப்படுத்தி அவற்றினை நிறைவேற்றுகின்ற அதிசயம் அன்று தொடக்கம் நிகழ்ந்து கொண்டே இருக் கிறது. ஆம்! இதனுடைய ஓர் அங்க மாகவே இந்த அற்புதநிகழ்வு இடம்பெற் றுள்ளதையும் அடியார்கள் உணர்ந்து கொள்ள முடியும்.

இதனால் தான் கலியுகக் கந்த னான சந்நிதியானை அவனது அடியவர் கள் எங்களுடன் வாழ்கின்ற தெய்வம், எங்களுக்குள் இருக்கின்ற தெய்வம், அது மட்டுமல்ல எங்களை வழிப்படுத்தி வாழ வைக்கின்ற தெய்வம் என உணர்ந்து உள்ளம் உருகி அவனது திருநாமங் களை தினமும் உச்சரித்தவண்ணம் உள்ளனர். அவனை நம்பினால் அவன் எங்களை நாடி வருவான்.

ஓம் முருகா!

# ஆனிமாத வாராந்த நிகழ்வுகள்

*01-06-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

சொற்பொழிவு:- "அ"

வழங்குபவர்:- சொல்வேந்தன் பொன். சுகந்தன்

---

*08-06-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

சொற்பொழிவு:- "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

வழங்குபவர்:- திரு இராம ஈஸ்வரன்

(முன்னாள் ஆசிரிய ஆலோசகர்)

---

*15-06-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

விடயம்:- ஆவரங்கால் சரவணாஸ் ஒலி அமைப்பாளர் ஆதரவில் பக்திப்பாடல்

---

*22-06-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

சொற்பொழிவு:- பெரியபுராணம் (தொடர்)

வழங்குபவர்:- அ. குமாரவேல் (சிரேஷ்ட விரிவுரையாளர்)

(யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

*29-06-2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்*

## ஞானச்சுடர் மலர் வெளியீடு

## ஆனி - 2007

## அருணகிரிநாதர் விழாவும் இடம்பெறும்.

பதிவு இல. Q.D/44/NEWS/2007

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2007

**ஜனவரி**

01.01.2007 மார்கழி 17 திங்கள்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
02.01.2007 மார்கழி 19 புதன்
திருவாதிரை விஷேட உற்சவம்
15.01.2007 தை 1 திங்கள்
தைப்பொங்கல்
27.01.2007 தை 13 சனி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**பெப்ரவரி**

01.02.2007 தை 18 வியாழன்
தைப்பூசம் விசேட உற்சவம்
16.02.2007 மாசி 4 வெள்ளி
மகாசிவராத்திரி விசேட உற்சவம்
23.02.2007 மாசி 11 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**மார்ச்**

05.03.2007 மாசி 19 சனி
மாசிமகம்
21.03.2007 பங்குனி 7 புதன்
ஆலய கும்பாபிஷேகதினம்
சகஸ்ரமகா சங்காபிஷேகம்
சண்முக அர்ச்சனை, விசேட உற்சவம்
23.03.2007 பங்குனி 9 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**ஏப்ரல்**

01.04.2007 பங்குனி 18 ஞாயிறு
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமான் கும்பாபிஷேகதினம்
14.04.2007 சித்திரை 1 சனி
மங்கள இந்துப் புதுவருடப் பிறப்பு
(சர்வமித்ரு) மாலை விசேட உற்சவம்
19.04.2007 சித்திரை 8 வியாழன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**மே**

02.05.2007 சித்திரை 19 புதன்
சித்திரா பூரணை விரதம்
12.05.2007 சித்திரை 29 சனி
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
காலை 10 மணி சங்காபிஷேகம்
காலை 11 மணி சண்முகார்ச்சனை
மதியம் 12 மணி விசேட உற்சவம்
15.05.2007 வைகாசி 2 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
30.05.2007 வைகாசி 18 புதன்
வைகாசி விசாகம் விசேட உற்சவம்

**ஜூன்**

13.06.2007 வைகாசி 30 புதன்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.06.2007 ஆனி 5 வெள்ளி
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
25.06.2007 ஆனி 11 திங்கள்
தீர்த்தமெடுப்பு

**ஜூலை**

02.07.2007 ஆனி 18 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
10.07.2007 ஆனி 26 செவ்வாய்
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
15.07.2007 ஆனி 31 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூசை

**ஆகஸ்ட்**

06.08.2007 ஆடி 21 திங்கள்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
12.08.2007 ஆடி 27 ஞாயிறு
ஆடிஅமாவாசை விரதம்
13.08.2007 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
கொடியேற்றம் அதிகாலை 5.30
16.08.2007 ஆடி 31 வியாழன்
காலைத்திருவிழா ஆரம்பம்
21.08.2007 ஆவணி 4 செவ்வாய்
பூங்காவனம்
22.08.2007 ஆவணி 5 புதன்
கைலாய வாகனம்
26.08.2007 ஆவணி 9 ஞாயிறு
சப்பறம்
27.08.2007 ஆவணி 10 திங்கள்
காலை தேர்
28.08.2007 ஆவணி 11 செவ்வாய்
காலை தீர்த்தம்
மாலை மௌனத் திருவிழா

**செப்ரெம்பர்**

03.09.2007 ஆவணி 17 திங்கள்
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
30.09.2007 புரட்டாதி 13 ஞாயிறு
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**அக்டோபர்**

11.10.2007 புரட்டாதி 24 வியாழன்
நவராத்திரி விரதாரம்பம்
20.10.2007 ஐப்பசி 3 சனி
சரஸ்வதி பூஜை
21.10.2007 ஐப்பசி 4 ஞாயிறு
விஜயதசமி
கேதாரகௌரி விரதாரம்பம்
27.10.2007 ஐப்பசி 10 சனி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்

**நவம்பர்**

06.11.2007 ஐப்பசி 22 வியாழன்
தீபாவளி
09.11.2007 ஐப்பசி 23 வெள்ளி
கேதாரகௌரி விரதம்
10.11.2007 ஐப்பசி 24 சனி
கந்தசஷ்டி விரதாரம்பம்
15.11.2007 ஐப்பசி 29 வியாழன்
கந்தசஷ்டி சூரன்போர்
16.11.2007 ஐப்பசி 30 வெள்ளி பாரணை
தெய்வானை அம்மன் திருக்கல்யாணம்
24.11.2007 கார்த்திகை 8 சனி
திருக்கார்த்திகை விரதம்
விசேட உற்சவம் குமாராலய தீபம்
25.11.2007 கார்த்திகை 9 ஞாயிறு
விநாயக விரதாரம்பம்
விஷ்ணு ஆலய தீபம்

**டிசம்பர்**

15.12.2007 கார்த்திகை 29 சனி
விநாயகர் சஷ்டி விரதம்
திருவெம்பாவை பூஜாரம்பம்
16.12.2007 கார்த்திகை 30 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை
21.12.2007 மார்கழி 5 வெள்ளி
கார்த்திகை விரதம்
விசேட உற்சவம்
24.12.2007 மார்கழி 8 திங்கள்
திருவாதிரை விசேட உற்சவம்

சுபமங்களம்
நன்றி